GOKULAM

அக்டோபர் 2008 • 80 பக்கங்கள் • விலை ரூ.8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


651


652


653


654


655


656


657


658


659


660


661


662


663


664


665


666


667


668


669


670


671


672


673


674


675

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

அக்டோபர் 2008 மலர் : 26 இதழ் : 9

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

இந்தியா என்று சொன்னதும் அயல்நாட்டினருக்கு, நமது கலாசாரம், அன்பான உபசரிப்பு, ஒற்றுமை, இவற்றுக்கெல்லாம் மேலாக நாட்டின் அமைதிதான் நினைவுக்கு வரும். நமது நாட்டின் அடையாளங்களாக இருந்து பெருமைப் படுத்துவதும் இவைகளே. ஆனால், சமீப காலமாக இது மாறிக்கொண்டே வருகிறது. கடந்த மாதத்தில் ஒரிசாவில் மதக் கலவரம், டெல்லியில் தொடர் குண்டுவெடிப்பு என சில விரும்பதகாத செயல்கள் நடந்தன. தவிர, பீகாரில்



நமது அடையாளங்கள்!

கடும் மழையால் வெள்ளம் ஏற்பட்டு மக்களை துன்பத்தில் ஆழ்த்தியது.

பொருளாதாரத்திலும் தொழில் துறையிலும் வேகமாக முன்னேறி, வல்லரசாகும் முயற்சியில் இருக்கிறோம். அதற்காக நமக்கான அடையாளங்களை தொலைப்பது சரியாகுமா? கண்களை விற்று சித்திரம் வாங்குவது என்பார்களே, அப்படி ஆகிவிடக்கூடாது. அதனால் மதவெறி, மொழி வெறியை விட்டு, எல்லோரிடமும் சகோதரர்களாக பழகுவோம்.

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்!



அன்புடன்

கோகு

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்: சீதா ரவி
உதவி ஆசிரியர்: ஆரணி யுவராஜ்
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்
தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)
தொலைநகல் :
044 - 4343 8899
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
சந்தா விவரம் :
உள்நாடு : ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 1000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai-600 032.

குழந்தைகளின் குதூகலம்!



த்ரில்

நீங்கள் லீவில் டூருக்குப் போவதென்றால் எங்கே போக விரும்புவீர்கள்? ஊட்டி... கொடைக்கானல்... ஏன்? நகரத்தில் கட்டடங்களையும், இரைச்சலான போக்குவரத்தையுமே பார்த்து சலிப்பு ஏற்பட்டிருக்கும். மலைப் பகுதியில் பசுமையும் அமைதியும் இருக்கும். அது உடலுக்கும் மனத்துக்கும் தெம்பு கொடுக்கும். ஆனால், ஒரு பையன் தனது சித்தப்பாவுடன் மனிதர்களே இல்லாத- ஆபத்துகள் நிறைந்த, பூமியின் மையப் பகுதிக்குச் செல்கிறான். அந்த த்ரில் பயணத்தை விறுவிறுப்புடன் சொல்லும் படம்தான் 'Journey to the center of the earth'

சிறுவன் சானின் அப்பா ஒரு புவியியல் ஆராய்ச்சியாளர். பூமியின் மையப் பகுதிக்கு ஆராய்ச்சி செய்யச் சென்றவர் பத்து வருடங்களாகியும் திரும்பவேயில்லை. இந்த நிலை

யில், தனது சித்தப்பா பிரெண்டன் வீட்டில் வந்து தங்குகிறான் சான். பிரெண்டனும் புவி ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்தான். சான் கொண்டு வந்த பெட்டியில், அவனது அப்பா எழுதி வைத்திருந்த குறிப்புகளைப் படிக்கிறார் பிரெண்டன். அண்ணனைத் தேடும் விதமாகவும், ஆராய்ச்சி செய்யும் விதமாகவும் சானுடன் பூமியின் இன்னொரு பகுதிக்குச் (இரண்டாம் உலகம்?) செல்கிறார். வழியில் ஒரு பெண் அவர்களுக்கு உதவுகிறாள். மூவரும் சானின் அப்பாவைக் கண்டுபிடித்தார்களா? திரும்பி வந்தார்களா?

அறிவியலும் கற்பனையும் கலந்த காட்சிகள் ஒவ்வொன்றும் பிரமிக்க வைக்கின்றன. மின்னும் பறவைகள், மாமிசம் சாப்பிடும் தாவரங்கள், பயங்கர மீன்கள், டைனோசார்... இப்படி படம் முழுவதும் ஆபத்துகள் துரத்துகின்றன. சுரங்கப் பாதைப் பயணம், எரிமலையின் உள்ளே செல்வது போன்றவை நாமும் செல்வதைப் போலுள்ளது.

பிரெண்டனுக்கு இணையாக, சானாக நடிக்கும் சிறுவன், பல சாகசங்களைச் செய்து நம்மை அசர வைக்கிறான். 'சும்மா கற்பனை' என்று சுலபத்தில் ஒதுக்கிவிட முடியாத த்ரில் படம்!

பயணம்!



ப்ரவீன்

கோமு கேட்ட தொப்பி!


கதை : ஜூலியட் மரியலில்லி　　படம் : பிள்ளை




கரடி கனகு...
எனக்கும் தேனே கிடைக்கிற தில்ல.
என்னோட மூங்கில் காட்டை அழிச்சுடுச்சு.
சிங்கராஜா செல்வத்திடம் சென்று...
அவனை இப்படியே விட்டா நாம வசிக்க காடே இருக்காது. ஏதாவது பண்ணுங்க.
அவசரப்படாதீங்க. யோசித்துத்தான் செய்யணும்.
அதுவரைக்கும் என்ன பண்றது?
இப்போதைக்கு உங்க இடத்தை சுத்தி வேலி போட்டுக்குங்க. பிறகு பார்ப்போம்.
கோமு வேலியையும் உடைத்து எறிந்தது.



சில நாட்கள் கழித்து... மரங்கள் குறைந்ததால், காட்டிலும் வெயில் தகித்தது.
யப்பா, என்ன வெயில்? தாங்கலை!
முயல் சுசி ஒரு யோசனை சொன்னது.
ஒரு தொப்பி தைச்சு போட்டுக்கோ.
குட் ஐடியா!
தையல் குருவிகளிடம் சென்று...
ஏய்... சோம்பேறிகளா என்ன தூக்கம்?
வேலையும் இல்ல. வசிக்க இடமும் இல்ல
நான் வேலை தரேன். எனக்கு தொப்பி தைச்சு குடுங்க.
அதுக்கு தேவையானது வேணுமே.
என்ன வேணும் சொல்லுங்க?
மரப்பட்டை, நார், இலை...
எங்கு சுற்றியும் அவைகள் கிடைக்காமல் சோர்வுடன் திரும்பியது கோமு.
நீங்க சொன்னது கிடைக்கலை.
நீதான் மரங்களை வெட்டிட்டியே.


இப்ப என்ன பண்றது?
மரக் கன்றுகளை நட்டு வளர்ப்போம்.
காடெங்கும் மரக்கன்றுகளை மிருகங்கள் நட்டன.
கோமுவும் அதில் சேர்ந்துக் கொண்டது.
செடிகள் வளர்ந்தன. மழையும் பெய்து காடே மலர்ச்சி பெற்றது.
காடே குளிர்ந்து போச்சு!
இன்னும் மரங்களை வளர்ப் போம்.
தெரியுமா? சோமனை போலீஸ் பிடிச்சுடுச்சு.
அவன் செய்த தப்புக்கான தண்டனை.
பறவைகள் அளித்த தொப்பியை கோமு அணிந்துகொண்டது.

பொம்மைகளின்

பொம்மையானது கி.மு.3000-1500 ஆண்டுகளிலேயே இருந்துள்ளது என்பது சிந்து சமவெளி நாகரிக காலத்தில் கிடைத்த பலவித பொருட்களின் மூலம் அறியமுடிகிறது.

ஆரம்ப நாட்களில் பொம்மைகளை கல், மண், களிமண், குச்சி போன்றவற்றால் தயார் செய்துள்ளார்கள். பிறகு துணி வகைகள், பிளாஸ்டிக் போன்றவைகளைக் கொண்டு தயார் செய்யத் தொடங்கினார்கள்.

சில ஆண்டுகள் முன்பு வரைகூட மண், பிளாஸ்டிக் பொம்மைகளே புழக்கத்தில் இருந்தன. இப்போதோ குழந்தைகள் மட்டுமல்லாமல் பெரியவர்களையே தங்கள் பக்கம் இழுக்கும் அளவுக்கு பொம்மைகளின் தரம் உயர்ந்திருக்கிறது.

தொலைக்காட்சியின் மூலம் டோரா, நாடி, பிங்க் பாந்தர் என புகழ்பெற்ற கார்ட்டூன்கள் வரை 'ஸாஃப்ட் டாய்ஸ்' வரிசையில் அணிவகுத்துள்ளன. விஞ்ஞான முன்னேற்றத்தில் பொம்மைகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இடம் விட்டு இடம் நகர்ந்து, ஆடிப்பாடி எல்லோரையுமே மகிழ்விக்கும் பொம்மைகள் பெருகிவிட்டன.

இம்மாதிரியான பொம்மைகளை வடிவமைத்து விற்பனை செய்யும் தொழிற்சாலைகளும் போட்டி போட்டுக் கொண்டு பெருகி வருகின்றன.



பரவலாக சர்வதேச அளவில் விளையாடப்படும் சில பொம்மைகளின் பின்னணியைப் பார்ப்போம்.

பார்பி டால்

'ரத் ஹாண்ட்லா' என்கிற அமெரிக்கப் பெண்மணி 1956ஆம் ஆண்டு ஐரோப்பா சென்றபொழுது, அங்கு 'பிட் லில்லி' என்கிற ஒரு பொம்மையைப் பார்த்தார். அந்த பொம்மையை மனத்தில் கொண்டு சிறுமிகள் விளையாடும்படியாக ஒரு புதுவித பொம்மையை வடிவமைத்தார். தன் மகள் 'பார்பரா'வின் பெயர் வரும் விதமாய் 'பார்பி' என்று பெயரிட்டார். அப்பொம்மை 1959ம் ஆண்டு மார்ச் மாதம் 9ம் தேதி விற்பனைக்கு வந்தது.

- மாலதி சந்திரசேகரன்

கதை!

அந்நாளே 'பார்பி'யின் அதிகாரப் பூர்வ பிறந்த நாளாகக் கொண்டாடப்பட்டது. இன்று உலக அளவில் சிறுமிகள் உபயோகப்படுத்தும் எல்லாவித பொருட்களிலும் 'பார்பி' படம் பொறிக்கப்படும் அளவுக்கு பிரபலமாகியுள்ளது.



டெடி பியர்

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த 'தியோடர் ரூஸ் வெல்ட்' என்பவர் வேட்டையாடச் சென்றார். காட்டில் பலரும் வேட்டையாடிக் கொண்டிருந்ததால், ஜனாதிபதிக்காக அவருடைய ஆட்கள் ஒரு கறுப்புக் கரடியை பிடித்துவந்து, சுடச் சொன்னார்கள். அவர் மறுத்ததால், மறுநாள் பத்திரிகைகளில் அவர் கரடியை சுட மறுத்த விபரத்தை கேலிச் சித்திரமாக பிரசுரித்திருந்தார்கள். இதைப் படித்த பொம்மைத் தயாரிப்பாளரான 'மோரிஸ் மிக்டம்' என்பவர் 1902ல் தான் தயாரித்து வைத்திருந்த கரடி பொம்மைக்கு 'டெடி பியர்' என்று பெயரிட்டார். 'சாப்ஃப்ட் டாய்' வகையைச் சேர்ந்த இந்தக் கரடி பொம்மை குழந்தைகளிடம் மிகவும் பிரபலமாகி விட்டது.

டாக்டர் செட்

நியூயார்க் நகரில் 'ஜாக் பிரஸ்மேன்' என்பவர் தம் குடும்பத்துடன் இருந்தார். அவருக்கு பொம்மைத் தயாரிப்பில் ஆர்வம் அதிகம். புதுவித பொம்மை ஒன்றை உருவாக்கும் எண்ணத்தில் குடும்பத்துடன் கலந்து ஆலோசித்து முடிவெடுத்ததுதான் 'டாக்டர் செட்'. பொதுவாக குழந்தைகளுக்கு டாக்டரிடம் போவது என்றாலே பயம்தான். அதைப்போக்க குழந்தைகளிடமே விளையாட்டுப் பொருளாக உருவாக்கிக் கொடுப்பது என்கிற தீர்மானத்தில் 1922ம் ஆண்டு 'பிரஸ்மேன் டாய் கார்ப்பரேஷன்' என்கிற தம் பொம்மைத் தொழிற்சாலையில் 'டாக்டர் பேக்' என்கிற பெயரில் இந்த செட்டைத் தயாரித்து விற்பனை செய்தார். இதனால் குழந்தைகளுக்கு டாக்டர் பயம் குறைந்




ததோ இல்லையோ, விளையாட புதுவித பொம்மை கிடைத்தது.



ஹாட் வீல்ஸ்

'எலியட் ஹேண்ட்லர்' என்பவர் ஈர்ப்பு சக்தியை மையமாகக் கொண்டு மிகச் சிறிய கார் பொம்மைகளைச் செய்தார். ஆரம்பத்தில் தீப்பெட்டி கார்கள் என்று கூறப்பட்டு வந்த கார் பொம்மைகள்தான் இருந்தன. 1968ஆம் ஆண்டு வார்ப்பு செய்த கார் பொம்மைகளைத் தயாரித்து விற்பனை செய்தார். அவரே நம்ப முடியாத அளவில் அந்த கார் பொம்மையானது, மணிக்கு முன்னூறு மைல்



கொசுறுச் செய்திகள் :

தற்சமயம் உபயோகத்தில் இருக்கும் 'மாஜிக் சிலேட்', 1920ம் வருடம், 'ஆர்.ஏ.வாட்கின்ஸ்' என்பவரால் உருவாக்கப்பட்டது. இவர் ஒரு கைதியாக இருந்தபொழுது வடிவமைத்தார்.

பொழுதுபோக்குக்காக பொம்மை சேகரிப்பவர்களின் ஒட்டுமொத்தமான கருத்து என்னவென்றால் 'ஹாட் வீல்ஸ்' மட்டுமே குறைந்த செலவில் நிறைய எண்ணிக்கைகளைத் தரும் பொம்மையாகும்.

அமெரிக்காவில், 'ஹவாய்' தீவில் 'பார்பி'க்காக ஐந்தாயிரம் வகைப்பட்ட 'பார்பி' பொம்மைகள் கொண்ட அருங்காட்சியகம் உள்ளது.

உலகின் முதல் பொம்மை அருங்காட்சியகம் 1986ஆம் ஆண்டு சான் பிரான் சிஸ்கோ நகரில் தொடங்கியது.

அமெரிக்காவில், 2009ம் ஆண்டு பிப்ரவரி பதினைந்து முதல் பிப்ரவரி பதினெட்டு வரை நடக்க இருக்கும் மிகப் பிரும்மாண்டமான 'அமெரிக்கன் இன்டர்நேஷனல் டாய் ஃபேர்' கண்காட்சியைக் காண உலக மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.



அடுத்த இதழ் முதல்...

அழகான படத்தொடர்

குழந்தைக் கடவுள்கள்!



விநாயகர், அனுமன், கருடன், கிருஷ்ணன்... இன்னும் பலர் உங்களை சந்திக்கப் போறாங்க. 'மீட்' பண்ண ரெடியா இருங்க!

வேகத்தில் மலை இறக்கத்தில்கூட ஓடியது. அதை வியந்து பார்த்த அவர், ''ஓ... ஹாட் வீல்ஸ்'' என்று சந்தோஷத்துடன் ஆரவாரம் செய்தார். அதிலிருந்து மிகச் சிறிய பொம்மை கார்களான 'ஹாட் வீல்ஸ்' சிறுவர்களிடையே மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றது. இப்பொழுது பத்தாயிரம் மாடல்களில் ஹாட் வீல்ஸ் விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு புதிய செய்தி என்னவென்றால், ஆறரை அங்குல நீளமும், இரண்டே முக்கால் அங்குல அகலமும் கொண்ட பொம்மைக் காரில் ஹைடிரஜன் வாயுவை நிரப்பினால், அதை மின்சார சக்தியாக மாற்றிக்கொண்டு ஓடும் புதுவித பொம்மைக் கார் விரைவில் வரப்போகிறது.

கைகளில் வைத்து விளையாடும் பொம்மைகளைத் தவிர புத்திசாலித்தனத்துக்கு சவால் விடும் அளவுக்கு பலவித விளையாட்டுச் சாமான்கள் இன்றைய குட்டீஸ்களிடம் புழக்கத்தில் உள்ளன.

அந்த வகையில் மிகவும் பிரபலமான ஒன்றுதான் 1980ல் அறிமுகமான கியூப் எனப்படும் ரூபிக்ஸ் கியூப் சாதனம். கணக்கு, விஞ்ஞானம், பௌதீகம், இராசயனம் போன்ற பலதரப்பட்ட புதிர் விளையாட்டுகள், பொம்மைகள் வடிவத்தில் கிடைக்கிறது. இவை பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமின்றி சிறுவர்களின் அறிவுத்திறனை வளர்த்து, உயர்த்தக் கூடிய ஒரு சாதனமாகவும் உள்ளது. ●

தட்டையில் : ரித்திகா ஜோஸ், அநிருத், ராகுல் அபினவ்
வண்ணப்படம் : ஸ்ரீஹரி






விளையாட்டு

பரவசமூட்டும்



ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கோடை கால ஒலிம்பிக், குளிர்கால ஒலிம்பிக் என்னும் வகைகளோடு 1960ஆம் ஆண்டு 'கோடைகால பாராலிம்பிக்' (உடல் குறை கொண்டவர்களுக்கான ஒலிம்பிக்) ஆரம்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1976ஆம் ஆண்டு முதல் குளிர்கால பாராலிம்பிக் போட்டியும் தொடங்கப்பட்டுத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஒலிம்பிக் போட்டிகளைப் போலவே இவையும் நான்காண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றன.



புலன் குறைபாடுடையோர் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம். கோடை - குளிர் கால பாராலிம்பிக் போட்டிகள் இரண்டாண்டு இடைவெளியில் நடைபெறுகிறது. இந்தப் போட்டியை வழி நடத்த 'ச்ர்வதேச பாராலிம்பிக் குழு' என்னும் அமைப்பு உள்ளது. கிரேக்க மொழியில் பாரா என்பதற்கு 'பக்கத்தோடு இணைந்த' அல்லது 'கூடவே' என்று பொருள். இப்போட்டிகள் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளோடு இணைந்து நடத்தப்படுவதால் இப்பெயர் பெற்றது எனலாம். குறைபாடு கொண்டவர்கள் விளையாடும் விளையாட்டு என எந்த நிலையிலும் பொருள் கொள்ள முடியாது. ஐ.பி.சி. அமைப்பு பாராலிம்பிக்ஸ் என்பதற்கு Parallel Olympics 'இணையான ஒலிம்பிக்ஸ், ஒலிம்பிக்ஸுக்கு இணையானது' என்ற விளக்கத்தை அண்மையில் கொடுத்துள்ளது.

1960ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கோடை கால பாராலிம்பிக் போட்டியில் மொத்தம் 400 விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டனர். 2004ஆம் ஆண்டு ஏதென்ஸ் நகரில் நடைபெற்ற போட்டியில் 136 நாடுகளிலிருந்து மொத்தம் 3,806 விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டனர். 1976ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட குளிர்கால பாராலிம்பிக் போட்டி ஸ்வீடனில் நடைபெற்றது. மொத்தம் 16 நாடுகளிலிருந்து 250க்கு மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டனர்.

1984ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற ஏழாவது கோடைகால பாராலிம்பிக் போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கத்தைப் பெற்று 33வது இடத்தைப் பிடித்தது. 1972ஆம் ஆண்டு

பாராலிம்பிக்!

- முனைவர் ஆசுரா



மேற்கு ஜெர்மனியில் நடைபெற்ற கோடைகால பாராலிம்பிக் போட்டியில் இந்தியா ஒரு தங்கப் பதக்கம் வென்று 25வது இடத்தைப் பிடித்தது.

2008ஆம் ஆண்டுக்கான பெய்ஜிங், பாராலிம்பிக் போட்டியில் மொத்தம் 148 நாடுகள் பங்கேற்றன. செப்டெம்பர் 6 முதல் செப்டெம்பர் 17ஆம் தேதி வரை இப்போட்டி நடைபெற்றது. மொத்தம் 20 விளையாட்டுப் போட்டிகளில் ஏறக்குறைய 4200 வீரர்கள் உலகெங்கிலும் இருந்து பங்கேற்றனர். ஒலிம்பிக்கைப் போலவே இதிலும் சீனாவே அதிக தங்கங்களை அள்ளி, பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தது. இந்தப் போட்டியின் முழக்கமாக 'ஒரே உலகம், ஒரே கனவு' என்ற வாசகம் இடம்பெற்றது.

போட்டியின் அடையாளச் சின்னமாக (LELE) 'லேலே' அறிவிக்கப்பட்டது. இதன் பொருள் 'அதிர்ஷ்டக்கார எருது மகிழ்ச்சியாக உள்ளது' என்பதாகும்.

2012ஆம் ஆண்டு கோடைகால பாராலிம்பிக் போட்டி இலண்டனில் நடைபெறவுள்ளது. சாதி, மதம், இனம், மொழி, நிறம் கடந்து மக்களை இணைக்கும் அன்புப் பாலம் விளையாட்டுதான். இதற்கு உடல் ஊனம் தடையாகுமா? இல்லை என்பதை உணர்த்துகின்றன பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள்!





களரி

''கன்யாகுமரியிலிருந்து ஒரு குழு இன்னிக்கு வந்து கலக்கப் போறாங்க'' என்று சித்தப்பா சொன்னபோது ரஞ்சனுக்கும் தமிழ்ச்செல்விக்கும் அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது புரியவில்லை.

''என்ன தமிழ், உனக்குக் கூடவா தெரியாது? போன வருடத் திருவிழாவிலே வந்து களரி நிகழ்ச்சியை செய்து காண்பிச்சாங்களே'' என்று சித்தப்பா சொன்னதும் தமிழ்ச்செல்விக்கு நினைவு வந்தது.

களரி என்பது ஒரு வித சண்டைக் கலை. இதில் அழகிய விதத்தில் கைகால்களை நகர்த்தி அற்புதம் செய்வார்கள். மிகவும் புத்தி சாலித்தனமாக எதிரியின் தாக்குதலைத் தடுக்க வேண்டும். அதே சமயம் திறமையுடன் எதிராளியைத் தாக்கவும் வேண்டும்.

அன்று இரவு களரி நிகழ்ச்சி நடக்கவிருந்த இடத்துக்குத் மூவரும் சென்றனர். மேடையில் முதலில் வந்த ஒருவர் ஒரு திரைப்படப் பாடலை சத்தமாகப் பாடினார்.

''கண் போன போக்கிலே கால் போகலாமா? கால் போன போக்கிலே மனம் போகலாமா?'' என்று பாடிவிட்டு ஒரு விளக்கம் கொடுத்தார்.

''நல்லாத்தான் சொல்லியிருக்காரு கவிஞர். ஆனால் எங்க களரிப் பயிற்சியில் கண் போன இடத்துக்குக் கால் போகணும். கை போகும் இடத்துக்குக் கண் போகணும்'' என்றார்.

பிறகு களரி நிகழ்ச்சி தொடங்கியது. இருவர் எதிர்ப்புறங்களிலிருந்து மேடைக்கு வந்து சேர்ந்தனர். ஒரு



அருண் சரண்யா



கையில் வாளும் மறுகையில் கேடயமும் வைத்திருந்தனர்.

"களரிங்கறது சண்டை பயிற்சியா?" என்று கேட்டான் ரஞ்சன்.

"அப்படியும் சொல்வாங்க. ஆனால் களரியை தற்காப்புக் கலைன்னு சொல்வது அதிகப் பொருத்தமாக இருக்கும்" என்றார் சித்தப்பா. நிகழ்ச்சியை கவனித்தனர்.

முதலில் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி வட்ட வடிவமாகச் சுற்றிச் சுற்றி வந்தனர். புலிகள் பாய்வதற்கு முன் பதுங்குவதைப் போல இருந்தது அது. பிறகு ஒருவரை நோக்கி ஒருவர் வாளை சுழற்றத் தொடங்கினர். பின்னர் எதிராளியைத் தாக்கும் விதமாக வாளைக் கொண்டு செல்ல, அவர் சாமர்த்தியமாக அந்தத் தாக்குதலைத் தனது கேடயத்தால் தடுத்து நிறுத்தினார்.

இமைக்கும் நேரத்தில் கால்களையும் கைகளையும் நீட்டியும், மடக்கியும், உயர்த்தியும், தாழ்த்தியும் அவர்கள் செய்த செயல்கள் பிரமிப்பாக இருந்தது. ஏதோ வேகமான நடனத்தைப் பார்ப்பதை போல ரஞ்சனுக்கு இருந்தது. என்ன ஒரு வேகம்! என்ன ஒரு விழிப்புணர்வு! கலந்து கொண்டவர்களின் உடல்கள் பளபள வென்று காட்சி அளித்தன. சித்தப்பாவிடம் கேட்டபோது "எண்ணெய் பூசி தயார் நிலையில் இருப்பார்கள். இதை 'மெய் வழக்கம்' என்பார்கள். அதாவது உடம்பைப் பழக்குகிறார்கள் என்று இதற்கு அர்த்தம்" என்றார்.

சிறிது நேரம் ஆனவுடன் இரு வீரர்களும் மேடையில் இருந்து மறைந்தனர்.

துளிகள்...


* தமிழகத்தின் மிகப் பழமையான வீர விளையாட்டு களரி. கேரளாவில் இதை 'களரிப் பயத்து' என்கிறார்கள்.
* களரியின் ஆரம்பம், நிலத்தை வணங்குவது. இதை 'தொழுதேடுப்பு' என்பர்.
* களரிக் கலையில் திறமைமிக்கவர்களில் பலரும் குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.
* இப்போதெல்லாம் பெண்களும் களரி விளையாட்டில் பங்கு பெறுகிறார்கள்.

முதலில் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி வட்ட வடிவமாகச் சுற்றிச் சுற்றி வந்தனர். புலிகள் பாய்வதற்கு முன் பதுங்குவதைப் போல இருந்தது.

வேறு இரண்டு வீரர்கள் மேடைக்கு வந்தனர். அவர்கள் கைகளில் இப்போது கத்தியும் கேடயமும் இருந்தன.

''இதுக்கு என்ன பேரு?'' என்று கேட்டான் ரஞ்சன். ''இதுவும் களரிதான். களரி விளையாட்டிலே கத்தி, வாள், சுருள்வாள், வீச்சுக் கத்தி இப்படிப் பலவித ஆயுதங்களை வச்சுக்குவாங்க'' என்று விளக்கினார் சித்தப்பா.

ஜூடோ, கராத்தே, குங்ஃபூ போலவே ஒரு சிறப்பான நாட்டுப்புற தற்காப்புக் கலை களரி என்று ரஞ்சனுக்குத் தோன்றியது. பெரியவனானதும் இதை உலகம் முழுவதும் பரப்ப முயற்சி செய்ய வேண்டும் என்று தீர்மானித்தான் ரஞ்சன். ●



தேடி வரும் கோகுலம்; படிக்கப் படிக்க குதூகலம்!



பெயர் : ....

முகவரி : ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

நான் நானாக...

ஜன்னலோர கம்பியைப் பிடித்த வண்ணம் ஸ்ருதி ஏதோ ஒரு நினைவில் மூழ்கிப்போனதைப் பார்த்த அம்மா மெதுவாய் அவளருகில் சென்று, ''என்ன ஆச்சு ஸ்ருதி கண்ணுக்கு'' என்று கேட்டாள்.

அம்மா மடியில் தலைசாய்ந்தவளாய் தன் ஆசைகளைச் சொல்லலானாள்.

''ஒரு நாள் மட்டும் அதோ அங்கே பறக்குதே அந்த பட்டாம்பூச்சியா நான் மாறணும். அடுத்த நாள், சிட்டுக் குருவியா மாறி மரத்துக்கு மேலே உட்கார்ந்து குஞ்சுகளுக்கு சாப்பாடு கொடுக்கணும், அங்கேயே தூங்கணும், ம்... ம்... அதுக்கப்புறம் அடுத்த நாள் ஒரு சிங்கமா மாறி காட்டுக்கு ராஜாவா சுத்தணும். என்னைப் பார்த்து எல்லா அனிமல்சும் பயந்து ஓடணும். அதுக்கப் புறம் ஒரு பாம்பா மாறி காலில்லாமல் எல்லா இடத்தையும் சுத்தி வரணும், அப்புறம் புள்ளிமானா மாறி துள்ளி துள்ளி ஓடணும். அப்புறமா யானையா மாறி உன்னையும் அப்பாவையும் தும் பிக்கையாலே தூக்கி என்னோட முதுகு மேலே வெச்சுக்கிட்டு எல்லா இடமும் சுத்திக் காட்டணும். ஒரு வெள்ளை முயலா மாறி துள்ளித் துள்ளிப் போய் ஒளிஞ்சுக்கணும். என்னை நீ தேடி வரணும். அப்புறம் டன்... ட.. டாய்ங். மறுபடியும் ஸ்ருதியா மாறி உன் மடி யிலே ஏறி விளையாடணும் ம்.. கடவுள் என் ஆசையை நிறைவேற்றுவாராம்மா'' என்று கேட்டாள் ஸ்ருதி.

அவள் சொல்லச் சொல்ல அம்மா வுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.

''எல்லார் மாதிரியும் ஆகலாம். ஆனால் எனக்கு பிடிச்சது இந்த கொழு கொழு அழகு ஸ்ருதியைதான்'' என்றாள்.

ஆனால் ஸ்ருதி மீண்டும் மீண்டும் தனது ஆசையைச் சொன்னாள்.

ஸ்ருதியை எப்படி வழிக்கு கொண்டு வருவது என்று சிந்திக் கலானாள் அம்மா. திடீரென்று மின்ன லாய் ஒரு யோசனை தோன்றியது. ஸ்ருதியை அழைத்து கொண்டு கணினி ரூமுக்குள் சென்று, கணினியை தட்டி விட்டாள்.

''இப்ப பாரு உனக்கொரு மேஜிக் காட்டப்போறேன்'' என்று சொல்லி அனிமேஷன் செய்ய ஆரம்பித்தாள். இப்பொழுது கம்ப்யூட்டரில் ஸ்ருதியின் முகம் தோன்ற ஆரம்பித்தது. அந்த முகத்துக்கு முதலில் ஒரு வண்ணத்துப் பூச்சியின் உடலை கொடுத்து பூக்களின் நடுவே பறக்கவிட்டாள். ஸ்ருதி கை



எம்.எஸ். சுஹைறல் அஹ்மத்

தட்டிச் சிரிக்க ஆரம்பித்தாள். ஆனந்தமாய் சுற்றித் திரிந்த வண்ணத்துப்பூச்சியை ஒரு பெரிய பல்லி வந்து நாக்கை நீட்டி விழுங்கியது.

''அச்சச்சோ, வேண்டாம்! நான் பட்டாம்பூச்சி ஆக வேண்டாம்'' அலறினாள் ஸ்ருதி.

அடுத்தபடியாக அவளின் முகத்துக்கு சிட்டுக் குருவியின் உடலை கொடுத்து மெல்ல பறக்கவிட்டாள் அம்மா. அது வானை முட்டி பிறகு மெதுவாக மரத்தின் மேலே வந்தமர்ந்தது. குஞ்சுகளை வாரி அணைத்து உணவு

ஊட்டியது. ஆனந்தமாய் இருந்த பறவைகளை ஒரு பெரிய ராட்சத கழுகு வந்து கொத்த மீண்டும் அலறினாள் ஸ்ருதி.

"வேண்டாம்! வேண்டாம்! நான் சிட்டுக் குருவியாக வேண்டாம்" என்று ஸ்ருதி கூற, இப்பொழுது சிங்கராஜா வாக அவள் மாற்றப்பட்டாள். கர்வ மாய் தலை நிமிர்ந்து இங்குமங்கும் கர்ஜித்து கொண்டு நடந்த சிங்கத்தை பார்த்து அத்தனை மிருகங்களும் பயந்தன. தனிக்காட்டு ராஜாவாக சுற்றிய சிங்கத்தை நோக்கி பாய்ந்தது வேடனின் துப்பாக்கி குண்டு. வீலென்று கத்தினாள் ஸ்ருதி.

ஸ்ருதி இப்பொழுது பாம்பாக மாற்றப்பட்டாள். அங்குமிங்கும் ஊர்ந்து சென்ற பாம்பை கீரிப்பிள்ளை சீண்ட இருவருக்கும் பயங்கரமான சண்டை பாம்பு தூக்கி வீசப்பட்டது. கடித்து குதறப்பட்டது.

"அம்மா வேண்டாம்! நான் பாம்பாக இருக்க வேண்டாம்மா, ப்ளீஸ்!"

"கடவுள் உனக்கு எல்லாம் கொடுத்திருக்காரு. உன்னால நல்லா பேச முடியும், ஆடிப்பாட முடியும், விளையாட முடியும்..."



இப்பொழுது அவள் அழகிய புள்ளி மானாக மாற்றப்பட்டாள். துள்ளித்துள்ளி திரிந்தாள். திடீரென்று எங்கிருந்தோ பாய்ந்து வந்த புலி, மானின் காலை கவ்வி பிடிக்க 'ஆ! ஸ்டாப் இட் மம்மி" என்றாள்.

மெல்லச் சிரித்த அம்மா, இப்போது ஸ்ருதியின் முகத்தோடு ஒரு யானையின் உடலைப் பொருத்த ஸ்ருதி நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"ஹை நான் யானை ஆயிட்டேன். என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது. நான் பெரிய்ய்ய்ய அனிமல்" என்றாள்.

அந்த யானை தன் தும்பிக்கையால் அம்மாவையும், அப்பாவையும் முதுகின் மேல் அமர்த்தியது. அங்குமிங்கும் ஊர் வலம் செல்லத் தொடங்கியது. திடீரென்று ஒரு புதருக்குள் காலை வைக்க பெரிய பள்ளமாக இருந்த அந்த இடத்தில் தவறி விழுந்தது. துப்பாக்கி ஏந்திய வேடர்கள் அதை நோக்கி சுடத் தயாரானார்கள்.

"வேண்டாம் மம்மி

ப்ளீஸ்!'' என்று பதறினாள்.

இப்பொழுது அவள் ஒரு அழகிய பஞ்சு போன்ற முயலாக மாறி அங்கு மிங்கும் துள்ளித் திரிந்தாள். தந்திரமாய் மெல்ல பாய்ந்த நரி அதை பிடித்து உண்ண தயாரானது.

''ஐயையோ வேண்டாம்! நான் முயலாக இருக்க வேண்டாம்!'' அழுது கொண்டே அம்மாவை கட்டிப்பிடித்தாள் ஸ்ருதி.

அவள் உடல் நடுங்கி வியர்வை ஆறாக ஓடியது. அம்மா அவள் தலையை கோதி முத்தமிட்டாள்.

''இப்ப சொல்லுடா நீ யாரா இருக்கணும்? யார் மாதிரி ஆகணும்?''

''நான் உன்னோட ஸ்ருதியா தான் என்றைக்கும் இருக்கணும்'' என்றாள்.

''இங்கே பாருடா. கடவுள் உனக்கு எல்லாம் குடுத்திருக்காரு. உன்னால சிரிக்க முடியும், பேச முடியும், நடக்க முடியும், ஆடிப் பாட முடியும். இந்த மிருகங்களை பத்தின கதையெல்லாம் கேட்கவும், பார்க்கவும், படிக்கவும் முடியும், அப்பா அம்மாவோட ஐஸ்க்ரீம் சாப்பிட முடியும், பீச்சுக்குப்போக முடியும். இன்னும் என்னவெல்லாமோ பண்ண முடியும். சரிதானே? நாம் எதுவாக இருக்கோமோ அதுக்காக கடவுளுக்கு நன்றி சொல்லணுமா இல்லையா?'' என்று கேட்டாள்.

''உண்மைதான்! இனி நான் நானாக இருந்து, என்னோட திறமையால பேரும் புகழும் வாங்குவேன்'' என்று கூறி அம்மாவை அணைத்துக்கொண்டாள் ஸ்ருதி. ●



விடையைச் சொல்; பரிசை வெல்-14ல் கலந்துகொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1.நடனமாடும் பீஜிங் 2.கிருஷ்ணர் 3.குமாவுன் புலிகள் 4.கோதண்டம் 5.மெட்டில்டா சில்கர்

பரிசு பெறுவோர் :

1. அ. இளம்பரிதி - பேராவூரணி
2. எஸ்.கிருத்திகா - திருப்பனந்தாள்
3. பி.கிருபாகரி - கீழ்ப்பெண்ணாத்தூர்
4. கா.பரணிமணிகண்டன் - பாதரகுடி
5. கே.பழனிவேல் - சோளிங்கர்
6. வி.வி.பானுமதி - சென்னை
7. மு.மஞ்சுளா - மயிலாடுதுறை
8. சி.பாலமுருகன் - சென்னை
9. எம்.ராஜேஷ்குமார் - கூடலூர்
10. வ.லோகேஷ் - திண்டுக்கல்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்; கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

ஹலோ, கோகுலம் குட்டீஸ்! நலமா? நீங்க தடுப்பூசிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீங்க. சில முக்கியமான தொற்று நோய்கள் நம்மைத் தாக்குவதைத் தடுக்க, முன்கூட்டியே போட்டுக்கொள்ளும் ஊசிக்குத் தடுப்பூசி என்று பெயர். இந்தத் தடுப்பூசி முறையை முதன் முதலில் கண்டு பிடித்தவர், **எட்வர்ட் ஜென்னர்.**

இவர் இங்கிலாந்தின் கிளோசெஸ்டர் ஷயர் மாவட்ட 'பெர்க்கிலி' எனும் சிறு நகரில் 1749 மே 17ம் நாள் பிறந்தார். தமது 13வது வயதில், பள்ளியில் படிக்கும் போதே அறுவைச் சிகிச்சை மருத்துவர் ஒருவரிடம் பயிற்சியாளராகச் சேர்ந்தார்.

இருபத்தோறாவது வயதில் லண்டன் சென்று, புனித ஜார்ஜ் மருத்துவமனையில் மருத்துவம் படித்தார். அங்கு புகழ்பெற்ற அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜான் ஹண்டர் என்பவரின் மருத்துவ மாணவர் ஆனார். இவர்தான் ஜென்னருக்கு எதையும் ஆராய்ந்து பார்க்கும் மனப்பான்மையை வளர்த்தவர்.

இவரிடம் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்ற பின்பு, 1773ல் தம்முடைய சொந்த ஊருக்கே திரும்பினார். அங்கு ஒரு சிறு மருத்துவமனையைத் துவக்கி, கிராமப்புற மருத்துவராகப் பிரபலமானார்.

இந்தக் காலக்கட்டத்தில் இங்கிலாந்தில் பெரியம்மை நோய் கடுமையாகப் பரவியிருந்தது. இது ஒரு தீவிர தொற்றுநோய். உயிர்கொல்லி நோயும்கூட. 'வேரிசெல்லா'

ஜென்னருக்கு



எனும் ஒருவகை வைரஸ் கிருமிகளால் இது ஏற்படுகிறது. குழந்தைகள் முதல் முதியவர் வரை யாரை வேண்டுமானாலும் தாக்கக்கூடியது.

ஆரம்பத்தில் குளிர் காய்ச்சல் போல் இந்த நோய் துவங்கும். அதைத் தொடர்ந்து உடலெங்கும் சிறு சிறு கொப்புளங்கள் தோன்றும். இந்தக் கொப்புளங்களில் நீர் கோத்து, பெரிய கொப்புளங்களாக மாறும். இந்தக் கொப்புளங்கள் புண்களாக மாறிய பிறகு, மறையாத தழும்புகளாகிவிடும். கண்களை இந்த நோய் தாக்குமானால் குருடாகிவிடும்.

இந்த நோய்க்கு அப்போது எந்தவித மருந்தும் இல்லை, தடுப்பதற்கும் வழியில்லை. ஆகவே இந்த நோயால் தாக்கப்பட்டவர்களைக் காப்பாற்றுவது மிகவும் சிரமமாக இருந்தது. இந்த நோயால் ஆயிரக்கணக்கான மக்கள் இறப்பதைக் கண்ட ஜென்னர், இதற்கு தீர்வு காணத் துடித்தார்.

ஹலோ, டாக்டர் ஸ்பீக்கிங் - 9

- டாக்டர் கு. கணேசன்



★ எட்வர்ட் ஜென்னர்

ஜே!

அப்போது அவருக்கு உதவியது ஒரு கிராமப்புற நம்பிக்கை. அதாவது, பசுக்களின் மடிக்காம்பைப் புண்ணாக்கும் 'கோவைசூரி' எனும் மாட்டு அம்மை நோய் மனிதர்களுக்கு வந்தால், அவர்களுக்குப் பெரியம்மை நோய் வருவதில்லை என்பதே அந்த நம்பிக்கை. அவர் வாழ்ந்து வந்த கிராமப்புறத்தில் பால் பண்ணைகளில் வேலை செய்வோர் பலரும் இதை உறுதியாக நம்பினர்.

இதனால் ஜென்னர் இந்த நோயாளிகளை மிகவும் கவனிக்கத் தொடங்கினார். அப்போது அவருக்கு ஒரு புதிய உண்மை புலப்பட்டது. அதாவது, ஒருமுறை கோவைசூரி நோய் வந்தவர்கள் உடலில் வைரஸ் கிருமிகளுக்கான எதிர்ப்புத்தன்மை வந்து விடுவதால், மீண்டும் அந்த நோய் அவர்களைத் தாக்குவதில்லை என்பதை அறிந்தார். இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு பெரியம்மை நோய்க்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்க முயன்றார்.

அது 1996ம் ஆண்டு மே மாதம் 14ம் நாள். அவருடைய கிராமத்தில் ஒரு பால் பண்ணையில் வேலை பார்த்து வந்த 'சாரா நீல்ஸ்' எனும் பெண்ணுக்கு மாட்டு அம்மை நோய் தாக்கியிருந்தது. அப்பெண்ணின் கையிலிருந்த அம்மைக் கொப்புளத்திலிருந்து சிறிது திரவத்தை ஒரு சிரிஞ்சு மூலம் உறிஞ்சி எடுத்தார். நோயற்ற எட்டு வயது சிறுவன் ஜேம்ஸ் பிப்ஸ் என்பவனின் கையில் அதைச் செலுத்தினார். சில வாரங்களில் அவனுக்கு மாட்டு அம்மைநோய் வந்தது. ஆனாலும் அவன் மிக விரைவிலேயே குணமானான்.

அதற்குப் பின்னர் ஜூலை 1ம் நாள் பெரியம்மை நோய் வந்த ஒருவரின் அம்மைக்கொப்புளத்திலிருந்து சிறிது திரவத்தை எடுத்து அதே பையனுக்குக் கையில் செலுத்தினார். இப்போது




மருத்துவ மேதைகள் :

ஆன்ட்ரியஸ் வெசாலியஸ்

நவீன மனித உடற்கூறியலின் தந்தை என்று போற்றப்படுபவர் ஆன்ட்ரியஸ் வெசாலியஸ். இவர் 16ம் நூற்றாண்டில் உலகப்புகழ்பெற்றிருந்த உடற்கூறு நிபுணர்களில் குறிப்பிடத்தக்கவர். இவர் 1514ம் ஆண்டு டிசம்பர் 31ம் நாள் பெல்ஜியத்தில் பிரஸ்ஸல்ஸ் எனும் நகரில் ஒரு மருத்துவக் குடும்பத்தில் பிறந்தார். பாரிஸ் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயின்றார். பாதுகா பல்கலைக்கழக மருத்துவமனையில் அறுவை மருத்துவத்தில் மிகத் தேர்ந்த விரிவுரையாளராகப் பணி புரிந்தார். இவருடைய காலத்தில் இறந்தவர்களின் உடல்களை அறுத்துப் பார்ப்பது என்பது மகத்தான குற்றமாகவும் பாவமாகவும் கருதப்பட்டது. விலங்குகளை அறுத்துப் பார்த்து அறிந்த தகவல்களோடு மனித உடல் தகவல்களையும் ஒப்பிடவேண்டும் என்றால், மனிதப் பிணங்கள் கிடைப்பது கடினமாக இருந்தது. இரவில் சுடுகாட்டுக்குச் சென்று, பிணங்களைக் கவனமாகச் சேகரித்து, ஒரு முழு வடிவ மனித எலும்புக்கூட்டினை உருவாக்கியவர் இவரே! மனித உடலமைப்பு தொடர்பாக இவர் சேகரித்த தகவல்களை 700 பக்கங்களில் ஏழு நூல்களாக எழுதி வெளியிட்டார். இந்த நூல்களில் மனித உடலமைப்பு பற்றி தத்ரூபமாக படங்களையும் வரைந்திருந்தார். இதுவே மருத்துவ உலகில் மனித உடலமைப்பு குறித்து, விரிவான நுணுக்கமான வர்ணனைகளோடு வெளியான முதல் நூல்!



அப்பையனுக்கு பெரியம்மை நோய் ஏற்படவில்லை. அவர் நினைத்தது போலவே அவன் உடலில் பெரியம்மை நோய்க்கு எதிர்ப்புத் தன்மை உண்டாகியிருந்தது. அப்படியெனில் பெரியம்மைக் கிருமிகளை சிறிதளவு எடுத்து நோயற்றவர்களுக்கு முன்கூட்டியே கையில் செலுத்திவிட்டால் அவர்களுக்கு அந்த நோய் எப்போதும் வருவதில்லை என்பது உண்மையாகிவிட்டது. இதற்கு அம்மை குத்துதல் என்று ஒரு பெயரையும் வைத்தார், ஜென்னர்.



தமது இந்தக் கண்டுபிடிப்பை 1797ல் ஓர் ஆய்வுக்கட்டுரையாக எழுதி வெளியிட்டார். ஆனால் இதை அன்றைய மருத்துவ உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை. என்றாலும் ஜென்னர் மனம் தளரவில்லை. உடனே லண்டன் சென்றார். அங்கு மூன்று மாதங்கள் தங்கியிருந்து தொண்டு உணர்வுடன் பலருக்கு அம்மை குத்தினார். தொடக்கத்தில் மக்கள் இதை ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும், இந்தத் தடுப்பு முறையை ஏற்றுக்கொண்டவர்களுக்குப் பெரியம்மை நோய் ஏற்படவில்லை என்ற உண்மை பரவியதும், ஜென்னருக்கு உலகம் முழுவதிலிருந்தும் அங்கீகாரம் கிடைத்தது. அவரது அற்புதக் கண்டுபிடிப்பைப் பாராட்டி அன்றைய இங்கிலாந்து அரசாங்கம் லட்சக்கணக்கான டாலர்களைப் பரிசாக வழங்கியது.

உலகம் முழுவதும் பரவிய இந்த அம்மை குத்தும் தடுப்புமுறையால், இன்று பெரியம்மை நோயை உலகத்தைவிட்டே விரட்டிவிட்டோம். இனி அடுத்த மாதம் இன்னொரு புதிய கண்டுபிடிப்பு பற்றித் தெரிஞ்சுக்குவோம். பை!




கோகுலம்

எக்ஸ்பிரஸ்

உள்ளே உள்ளவை...

* டேமியன் ராஜா செய்த சபதம்... - 30
* பழமொழிக்குள்ள மறைந்திருக்கிற உயிரினங்களைத் தெரிஞ்சுக்க... - 35
* ஒட்டகச்சிவிங்கி ஹலோ சொல்லும் விதம்... - 40
* டோபட்டோ தவமிருந்தது எதுக்குன்னு பார்க்க... - 42
* ஏலக்காய் நகரம் எங்க இருக்குன்னு தெரிஞ்சுக்க ... - 48
* ஒரு வெள்ளிக்காசுல வாங்கிய விஷயங்கள்... - 50
* தொந்தரவு - இது எந்த மொழி வார்த்தைன்னு அறிய... - 53





I. 1.வாயிலே தோன்றும் பூ; வலிகளை நீக்கும் பூ - அது என்ன?

2. நடக்க முடியாத மான்; சிறைக்கு புகழ்பெற்ற மான் - அது என்ன?

3. பச்சைக் குடத்திற்குள் இனிப்பான பானம் - அது என்ன?

- ஆர்.காயத்ரி, உறுப்பினர் எண் : 453, காமராஜ் பதின்ம மேல்நிலைப் பள்ளி, கோவில்பட்டி

செம்பட்டு உடையழகி!



II.1. பக்கத்தில் இருப்பாள்; படுத்தால் மறைவான் - அவன் யார்?

2. பஞ்சைத் தின்றவன் படுத்தே கிடக்கிறான் - அவன் யார்?

3. நாலு மூலையில் தள்ளும்; ஒரு மூலையில் ஒதுங்கும் - அது என்ன?

- பி.சர்வேஸ்வரன், உறுப்பினர் எண் : 456, மூன்றாம் வகுப்பு, ஜீவனா பள்ளி, மதுரை

III. 1. கட்டாத வெள்ளைக் கோட்டைக்குள்ளே எலும்பு இல்லாதவன் புரள்கிறான் - அவன் யார்?

2. ஆரம்பத்தில் பச்சை; முடிவில் சிவப்பு; எப்போதும் எரிப்பு - அது என்ன?

3. வெய்யிலில் வருவான்; காற்றில் உலர்வான் - அவன் யார்?

- அ.அபிராமி, உறுப்பினர் எண் : 54, ஐந்தாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, காஞ்சிபுரம்





IV. 1.பார்த்தால் கல்; பல் பட்டால் தண்ணீர்
- அது என்ன?

2. ஊளையிட்டபடி ஊரைச் சுமப்பான்
- அவன் யார்?

3. மூன்று திருடர்களைச் சுற்றி ஒரு டஜன் போலீஸ் - அது என்ன?

- பா.விக்னேசுவரன், குட்டம்



V. 1. உப்பைத் தின்றவன், தூங்காமல் அலைகிறான் - அவன் யார்?

2. செம்பட்டு உடையழகி; தலைகீழ் குடை பிடிப்பாள் - அவள் யார்?

3. தலையிருக்கும் மனிதனில்லை; பூ இருக்கும் செடி இல்லை - அது என்ன?

- ந.பிருந்தா, ஆறாம் வகுப்பு, ராஜ் மெட்ரிக்குலேஷன் பள்ளி, மயிலாடுதுறை



விடைகள்:

I. 1.சிரிப்பு, 2. அந்தமான், 3.இளநீர் **II.** 1.நிழல், 2.தலையணை, 3.துடைப்பம் **III.** 1. நாக்கு, 2.மிளகாய், 3.வியர்வை **IV.** 1.பனிக்கட்டி, 2.தொடர்வண்டி, 3.கடிகாரம் **V.** 1.கடல் அலை, 2.மிளகாய் பழம், 3.நாணயம்



ப.கஜோல் மஞ்சு,
ஏழாம் வகுப்பு, ஊ.ஒ.ந.நி. பள்ளி,
அகுர்



வி.நித்யா,
ஒன்பதாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்

நா.யோகலட்சுமி,
சுவாமிநாதா உதவி பெறும்
நடுநிலைப் பள்ளி,
சுவாமிமலை



அ.சார்லஸ்,
ஆறாம் வகுப்பு,
உறுப்பினர் எண் : 165,
எஸ்.ஆர்.எஃப். வித்யாலயா
மெட்ரிக்குலேஷன் பள்ளி,
சென்னை



எஸ்.அர்சன ப்ரியா,
ஏழாம் வகுப்பு,
வித்யா விஹாஸ் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
திருச்செங்கோடு





உங்கள் கைவண்ணம்!

புல்... புதியவர்... புத்திமதி...

முன்னொரு காலத்தில் ஃப்ரான்ஸ் நாட்டில் டேமியன் என்ற மன்னன் இருந்தான். அவன் மிகச் சிறந்த அறிவாளி, பலசாலி. பல மன்னர்களை வீழ்த்தித் தனது ராஜ்ஜியத்தை விரிவுபடுத்தியவன்.

ஒருமுறை தன் நாட்டின் தெற்குப்புற எல்லைப் பிரதேசங்கள் சிலவற்றை தன் வசம் இழுக்கத் திட்டமிட்டான் டேமியன். இது பல காலமாக அவன் கண்டிருந்த கனவு. டேமியனிடம் திறமை வாய்ந்த குதிரைப் படை இருந்தது. தன்னுடைய படைகளை அழைத்துக்கொண்டு தனது நாட்டு தென்பகுதியினூடே சென்று எல்லையைத் தாக்கப் புறப்பட்டு விட்டான்.

பரந்து விரிந்த எல்லைப் பகுதி. சுற்றிலும் மலைகளும் பள்ளத்தாக்குகளும், வயல்வெளிகளிலுமாக கண்களைப் பரவசப்படுத்தின. குதிரைகளுக்குப் புல் அவசியமல்லவா? ஆகவே புறப்படும் போதே பெரிய பெரிய சாக்குகளும், புல் அறுக்க அரிவாள் போன்ற உபகரணங்களும் எடுத்து வர சேவகர்களை நியமித்திருந்தான் மன்னன். எல்லைப் பகுதியை வந்தடைந்ததுமே சுற்றிலுமுள்ள நீர் நிலைகளை முதலில் ஆராய்ந்துகொண்டு படையை அங்கே நிறுத்த உத்தரவிட்டான். தானும் மரத்தடியில் இளைப்பாறத் தயாரானான். சரி, குதிரைகளுக்கு ஓடைநீர் தாகத்துக்குக் கிடைத்துவிடும். ஆனால் புல்லுக்கு என்ன செய்வது? நாலாபுறமும் நோக்கியும் எந்தப் புல்வெளியும் கண்ணுக்குத்



தென்படவில்லை. எனவே, தன் ஆட்களை அழைத்து புல் எடுத்துவர உத்தரவிட்டான்.

சாதாரணமாகவே எல்லைப்புற பகுதிகளில் ஆள் நடமாட்டம் அவ்வளவாக இருக்காது. புல் வெட்டி வருவது என்பது எளிதான வேலைதான். மேலும் தனது ஆட்களை சாதாரண உடையில் செல்ல உத்தரவிட்டான் மன்னன். அவர்களும் புறப்பட்டனர். வெகுதூரம் நடந்துவிட்டனர். புல்வெளி மட்டும் தென்படவே இல்லை. அதிகாரிகளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்தச் சமயத்தில்தான், பள்ளத்தாக்கில் ஒரு ஒற்றைக் குடிசை தென்பட்டது. அங்கே போய் கேட்டுப் பார்க்கலாம் என்ற எண்ணத்தில் குடிசைக்கு விரைந்தனர்.

''ஐயா... ஐயா'' குடிசைக் கதவைத் தட்டி அவர்கள் அழைத்ததும் உள்ளேயிருந்து வயதான ஒருவர் வெளியே வந்தார்.

''ஐயா, எங்களுக்கு நிறைய புல் வேண்டும். புல் இருக்குமிடம் தெரியவில்லை. சொல்ல முடியுமா?''

''அதற்கென்ன சொல்கிறேனே. சற்று இருங்கள் வருகிறேன்.'' என்று கூறிய முதியவர் உள்ளே சென்று காலணியை அணிந்து வந்தார். ஒரு கைத்தடியையும் ஏந்திக்கொண்டு, ''என் பின்னே வாருங்கள்'' என்று நடந்தார். சிறிது தூரம் சென்றதுமே மலைத்துப் போகுமளவுக்குப் புல்வெளிகள் தென்படலாயிற்று.

''ஐயா மிக்க நன்றி! இங்கு நாங்கள் புல் வெட்டிக் கொள்ளலாமா?''



ஃப்ரெஞ்சு நாட்டுக்கதை

வி. ஜெயலட்சுமி

என்று பரபரத்த கைகளுடன் ஆட்கள் தயாரானார்கள். ஆனால் முதியவரோ "இங்கெல்லாம் வேண்டாம். என் பின்னே வாருங்கள். நான் சொல்லும் இடத்தில் புல் வெட்டலாம்'' எனக் கூறிவிட்டுத் தொடர்ந்து நடக்கத் துவங்கினார். வேறு வழியில்லாமல் அனைவரும் அவரைப் பின் தொடர்ந்தனர்.



சளைக்காமல் அத்தனை புல்வெளி களையும் தாண்டி கடைசியாக இருந்த புல்வெளியை அடைந்த முதியவர் சொன்னார். ''இதுதான் நீங்கள் புல் அறுக்க வேண்டிய இடம்!''

''ஐயா, அத்தனை புல்வெளிகளையும் விட்டுவிட்டு இங்கே ஏன் கூட்டி வந் தீர்கள்? முதலிலேயே எங்களை அறுக்க விட்டிருந்தால் நடையும், நேரமும் மிச்ச மாகியிருக்குமே!'' என்றார் ஒருவர்.

அந்த வயதானவர் அமைதியாகப் பதில் சொன்னார். ''அந்தப் புல்வெளி களெல்லாம் என்னுடையவை அல்ல. இதுதான் என்னுடையது. இங்கே தாராள மாக வெட்டிக் கொள்ளுங்கள். அங்கே வெட்டச் சொல்ல எனக்கு அதிகாரமும் கிடையாது. நான் அப்படிச் செய்ய வும் மாட்டேன். இங்கு மனித நடமாட்டமே இல்லை என்பதற் காக அடுத்தவர் நிலத்தில் அநி யாயமாகக் கைவைக்கச் சொல்லலாமா? தவறல்லவா''...

அவர் பேசப்பேச அதி காரிகளை மௌனமும் நாணமும் கவ்விக்கொண்டது.

''ஐயா, கஷ்டப்பட்டு வளர்த்துள்ள உங்கள் புல்வெளியிலும் நாங்கள் அறுக்கமாட்டோம். வருகிறோம் நன்றி.'' என்று கூறிவிட்டு அவர்கள் வந்த வழியே திரும்பி மன்னன் இருக்கு மிடத்தை அடைந்து விவரத்தைச் சொன் னார்கள். மன்னன் வெட்கிப் போனான். ''பிறருக்குச் சொந்தமான சாதாரணப் புல்வெளி ஒன்றைக் கூடத் தொடாத மக்கள் வாழும் நாட்டையா அபகரிக்கப் பார்த்தேன்? இனி எனது காலம் உள்ள வரை வேறு நாடுகளின் மீது படை யெடுக்கமாட்டேன். இது உறுதி'' என்று முழக்கமிட்டவன், தனது படைகளுடன் நாட்டுக்குத் திரும்பினான்.

இங்குள்ள படத்தை உங்கள் கைவண்ணத்தால் அழகுபடுத்துங்க குட்டீஸ்!



வண்ணம் தீட்டுங்கள்!

I. இடையில் எந்த எந்தக் குறியீடுகளை உபயோகப்படுத்தினால் சரியான விடை வரும்?

1) 4605 15 111 2 108 = 500
2) 25 24 3 125 11 = 2
3) 22 22 16 50 = 10
4) 265 133 4 9 15 = 312
5) 45 84 4 6 25 = 61

- என்.லோகேஷ்வர், உ. எண் : 586, புதுச்சேரி

II. இங்குள்ள காலி கட்டங்களில் 15 முதல் 30 வரை உள்ள எண்களை நிரப்புங்கள். எந்த வரிசையில் கூட்டினாலும் 90 வர வேண்டும். ஒருமுறை வந்த எண் மீண்டும் வரக் கூடாது. முயற்சியுங்கள்!

- பி.சர்வேஸ்வரன், உறுப்பினர் எண் : 456, மூன்றாம் வகுப்பு, ஜீவனா பள்ளி, மதுரை

15			18
	20	21	
		25	26
27			30

III. ஒன்றிலிருந்து ஒன்பது வரை உள்ள எண்களைப் பயன்படுத்தி (கூட்டியும், பெருக்கியும்) 100 வர வைக்க முடியுமா?

- பா.விக்னேசுவரன், குட்டம்




'எண்' விளையாட்டு!

ஒளிந்துள்ள உயிரினங்கள்...





V. பழமொழிகளுக்குள் ஒளிந்துள்ள உயிரினங்கள் எவை?

1. .... அடிக்கும் முன்னே கிலி அடிக்கும்.
2. .... கொழுத்தால் வளையில் தங்காது.
3. அந்தியில் .... வந்தால் அடை மழை அதிகரிக்கும்.
4. அடியாத .... படியாது
5. .... கண்டால் படையும் நடுங்கும்
6. .... ஊரக் கல்லும் தேயும்
7. .... க்குத் தெரியுமா கற்பூர வாசனை?
8. .... க்கும் அடி சறுக்கும்.
9. சூடு கண்ட .... அடுப்பண்டை போகாது.
10. .... நக்கி சமுத்திரம் குறையுமா?
11. தண்ணீர் உள்ள மட்டும் .... துள்ளும்.
12. ஆள் கண்டு மிரட்டுமாம் ஆலங்காட்டு ....
13. .... பகை; குட்டி உறவா?
14. .... வளையானாலும் தனி வளை வேண்டும்.
15. பலாப்பழத்தை .... மொய்ப்பது போல.









- அ.அனீஸ் ஃபாத்திமா, உறுப்பினர் எண் : 34, பதினொராம் வகுப்பு, சிசம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, போடிநாயக்கனூர்.

IV. 1 முதல் 12 வரை உள்ள எண்களை கீழே உள்ள வடிவத்தில் பயன்படுத்தி, நேர் கோட்டில் எப்படிக் கூட்டினாலும் கூட்டுத் தொகை 26 வர வேண்டும்.

- கு.ஷ்யாம், ஏழாம் வகுப்பு, உறுப்பினர் எண் : 7, ஸ்ரீமாதா மெட்ரிகுலேஷன் பள்ளி, கும்பகோணம்



விடைகள் : 56ஆம் பக்கம்

அமிழ்தன் வளர்த்த



அழகு பச்சைக் கிளியினை
அமிழ்தன் வாங்கி வந்தனன்
பழகு தமிழில் பேசவே
பயிற்சி தினமும் தந்தனன்!

சின்ன சுரைக்காய்ப் பிஞ்சிலே
சிவந்த மிளகாய்ப் பழத்தினை
முன்னே செருகி வைத்ததாய்
மூக்கு கொண்ட கிளியது!

பழங்கள் தின்னக் கொடுத்தனன்
பருக நீரும் வைத்தனன்

குழந்தை போலக் கிளியினைக்
கூண்டில் காத்தான் அமிழ்தனும்!

இறக்கை வெட்டப் பட்டதால்
ஏங்கிக் கிளியும் அடிக்கடி
பறக்க முயற்சி பண்ணியே
பார்த்து பாவம் தவித்தது!

கீச்சு கீச்சு சத்தமே
கிளியும் போட்டுத் தமிழிலே
பேச்சு பேச முனைந்தது
பிரியத் தோடு வளர்ந்தது!

அந்தி மாலை வேளையில்
அந்தக் கூண்டைத் திறக்கையில்



கவிஞர் வெங்கடேசபாரதி



அழகுக் கிளி!

வந்து வெளியே கிளியது
வண்ண நடையும் பயின்றது!

எங்கி ருந்து வந்ததோ?
இந்தத் திருட்டுப் பூனையும்
அங்கி ருந்த கிளியினை
அள்ளிக் கவ்விக் கொண்டது!

அமிழ்தன் அந்தப் பூனையை
அதட்டிப் பிடிக்கத் தாவினன்

இமைப் பொழுதில் பூனையும்
இனிய கிளியைக் கொன்றது!

பச்சைக் கிளியைப் பூனைவாய்
பறிகொ டுத்த அமிழ்தனும்
அச்சம் சூழும் கவலையில்
ஆழ்ந்து நெஞ்சு வருந்தினான்!

மரத்தை விட்டுக் கிளியது
வந்த தாலே மாண்டது
இருக்க ஒண்ணா இடத்தினால்
எவர்க்கும் தீங்கு நேருமே!

தாயும் பசுமையும்!





சிரிக்கும்

நான் தினமும் மாலை பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்ததும் தோட்டத்துக்கு சென்று தேவையற்ற புற்கள், கொடிகள் போன்றவற்றை வெட்டி சுத்தம் செய்வேன். செடிகளுக்கு தண்ணீர் போகும்படி பாதை அமைப்பேன். பின்னர் தோட்டத்தில் உள்ள பூச்செடிகள், மாமரம், வாழை மரம், தென்னை மரம் போன்றவற்றுக்கு தண்ணீர் விடுவேன். அவை அனைத்தும் காற்றில் அசைந்தாடும்போது என்னைப்


நான் டியூசன் படிக்கும் ஆசிரியர் அவ்வப்போது ஏதாவது வித்தியாசமான, பயனுள்ள போட்டிகளை வைப்பார். சமீபத்தில், 'தூய்மை மற்றும் பசுமையான சுற்றுச்சூழல்' என்ற தலைப்பைக் கொடுத்தார்.

''எளிமையான பொருட்களை வைத்து இந்தத் தலைப்புக்குப் பொருத்தமாக வீட்டையோ, கட்டடத்தையோ செய்து

எடுத்து வாருங்கள்'' என்றார்.

நான், தெர்மாகோல், வண்ணக் காகிதங்கள் மற்றும் விளையாட்டு பொம்மைகளைக் கொண்டு இந்த வீட்டை உருவாக்கினேன். ஆசிரியர் உட்பட எல்லோரும் பாராட்டினார்கள். பரிசும் கிடைத்தது.





''சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்வதும், மரங்களை வளர்ப்பதும் நம் ஒவ்வொருவரின் கடமை. இந்த பூமிக்கும் வருங்கால சந்ததியினருக்கும் நாம் தரும் சொத்து இதுதான்'' என்று ஆசிரியர் தெரிவித்தார். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் இதனை மனதில் பதிய வைத்துக் கொள்வோம்.

இனிய இல்லத்துக்கு அம்மா தேவை
இனிய நாட்டுக்கு பசுமை தேவை
தாயைக் காப்பது நமது கடமை
பசுமையைக் காப்பது நமது கடமை
மரங்களைப் பேணி வளர்த்திடுவோம்
நாளைய இந்தியாவை
வளமாக்கிடுவோம்!

- எம்.மோனிஷா, ஏழாம் வகுப்பு,
மாநகராட்சி தொடக்கப் பள்ளி,
மடுவன்கரை

செடிகள்!





பார்த்து சிரிப்பது போன்று இருக்கும்.

விடுமுறை நாட்களில் என் அம்மாவுக்கு உதவியாக வெண்டை, முள்ளங்கி, கொத்தவரை, கீரை போன்ற விதைகளை விதைத்து, நன்கு வளரும்வரை பராமரித்து வருகிறேன். இதனால் எங்கள் வீட்டுக்குத் தேவையான காய்கள் கிடைக்கிறது. என் அம்மாவும், அப்பாவும் என் செயல்களைப் பாராட்டுவர்.

- கு.ஷ்யாம், உறுப்பினர் எண் : 7,
ஸ்ரீமாதா மெட்ரிகுலேஷன் பள்ளி,
கும்பகோணம்








உயரமான

* உலகிலேயே உயரமான பாலூட்டி ஒட்டகச்சிவிங்கிதான்.
* இதன் இதயம் 10.8 கிலோ எடை கொண்டது.
* முழு வளர்ச்சியடைந்த ஒட்டகச்சிவிங்கியின் கழுத்து 227 கிலோ எடை கொண்டது.
* ஒட்டகத்தைவிட ஒட்டகச்சிவிங்கியால் நீண்ட நாட்கள் தண்ணீர் இல்லாமல் வாழ முடியும்.
* நாக்கு கறுப்பு நிறத்தில் இருக்கும். நீளம் 21 இஞ்ச்கள்.
* நாக்கால் தன்னுடைய காதுகளை எளிதாக சுத்தம் செய்யும்.
* எல்லா மிருகங்களையும்விட ஒட்டகச்சிவிங்கிக்குத்தான் இரத்த அழுத்தம் அதிகம்.

தஸ்மிலா, இராமநாதபுரம்



பாலூட்டி!



* ஒரு நிமிடத்தில் அதன் இதயம் 605 லிட்டர் ரத்தத்தை 'பம்ப்' செய்யும்.
* இரண்டு ஆண் ஒட்டகச் சிவிங்கிகள் சந்திக்கும்போது, தங்கள் நீண்ட கழுத்துகளை மரியாதை நிமித்தமாக மோதிக்கொள்ளும்.
* ஒட்டகச் சிவிங்கி மிகப் பலமாக உதைக்கும். அதன் உதையால் சிங்கத்தைக்கூட கொன்று விடும்.

டோபட்டோ நல்ல பையன்தான். ஆனால், படிப்பது மட்டும் அவனுக்குப் பிடிக்கவே இல்லை. அந்த ஒரு விஷயத்தில் மட்டும் யார் என்ன சொன்னாலும் அவன் கேட்பதே இல்லை.

"அதெல்லாம் வேண்டாம். படிப்பே எனக்குக் தேவையில்லை" என்பான்.

எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை டோபட்டோ. திருத்த முடியாமல் சோர்ந்து போனார்கள் பெற்றவர்கள். டோபட்டோ வளர்ந்து பெரியவனானான்.


அவனுடைய நண்பர்கள் நன்கு படித்தவர்களாகவும், அனைவராலும் மதிக்கப் படுபவர்களாகவும் இருந்தனர். தான் படிக்காததால், மற்றவர்கள் தன்னை மதிக்கவில்லை என்று புரிந்தது அவனுக்கு.

என்ன செய்வது என்று யோசித்தான். அப்போது, தவமிருந்து அரிய சக்திகளைப் பெற்றதாகப் படித்த கதைகள் நினைவுக்கு வந்தன.

மறுநாள் காலையில் தவமிருக்க ஆரம்பித்தான்.

கங்கைக் கரையில், வலது காலை தரையில் ஊன்றி, இடது காலை இடது முழங்காலில் வைத்து, இரண்டு கைகளையும் தலைக்கு மேல் கூப்பியபடி தவத்தை ஆரம்பித்தான்.

'இப்படி தவமிருந்தால் இறைவன் தோன்றுவார்; நமக்கு கல்வியறிவைத்



தருவார்' என்று அவன் நம்பினான். எவரிடமும் கேட்கவில்லை. தவத்தைத் தொடர்ந்தான்.

அவனுடைய தவத்தைக் கவனித்தான் இந்திரன். டோபட்டோவுக்கு நல்லறிவு புகட்ட வேண்டும் என்று நினைத்தான். எனவே, சாதாரண மனிதனின் வடிவத்தில் தோன்றினான்.

கங்கைக் கரையில் நின்றபடி நீரினுள் ஒவ்வொரு கல்லாக வீசிக் கொண் டிருந்தான். திடீரென்று கண்விழித்த டோபட்டோ, இந்திரனைப் பார்த்தான்.

'யார் அவன்? இங்கே என்ன செய்கிறான்?' என்று யோசித்தவன்...

''ஏய், நான் தவம் செய்துட்டு இருக்கறது தெரியலியா? இப்படி கற்களை தண்ணீரில் போட்டு சத்தம் செய்துட்டு இருக்கியே. யார் நீ?'' என்று கோபத்துடன் கேட்டான்.

''இந்தக் கற்களைத் தண்ணீரில் போட்டு போட்டு ஒரு பாலத்தைக் கட்டப் போறேன்'' என்றான் இந்திரன்.

''அறிவுக்கெட்டத்தனமா பேசறியே. அது எப்படி முடியும்?'' என்று கிண்டலாக கேட்டான் டோபட்டோ.

''ஏன் முடியாது? நீ அடிப்படை கல்வியைக்கூட கற்காமல் தவம் மட்டுமே செய்து, அறிவு பெற்றிட முடியும்னா என்னாலும் இங்கே பாலத்தைக் கட்ட முடியும்'' என்றான் இந்திரன். டோபட்டோவுக்கு தன் தவறு புரிந்தது.

''ஐயா, உங்களைப் பார்த்தால் சாதா ரண மனிதனாகத் தெரியவில்லை. தக்க சமயத்தில் எனக்கு உண்மையை உணர்த் தினீர்கள், நான் இப்போதே வீடு திரும்பி, கல்வி கற்கிறேன்'' என்றான்.

இந்திரன் ஆசீர்வதித்தான். டோபட்டோ புது மனிதனாய் ஊர் நோக்கி நடந்தான்.

- ஆ.வெங்கடேஷ்,
நான்காம் வகுப்பு,
பாரத் மாண்டிசோரி
மெட்ரிக் மேல்நிலைப்
பள்ளி, இலஞ்சி



பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது! விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்துகொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும்.

மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை





சூப்பர் ப்ரியா!

கோவைபுதூர், ருக்மணி கண்ணன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிப்பவர் ப்ரியா. நடனம் மற்றும் ஓவியத்தில் பல பரிசுகள் பெற்றவர். தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் படிப்பில் முதலிடம் பிடித்து பரிசுகளை வென்றுள்ளார். ப்ரியாவின் சாதனை தொடர கரவொலி எழுப்புவோம்!



சபாஷ் நந்தினி!

ஈரோடு, யு.ஆர்.சி. பழனியம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிப்பவர் நந்தினி. 'தமிழ்நாடு கலைப் பயிற்சி மையம்' மாவட்ட



அந்தச் சாதனை, கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்!

அனுப்ப வேண்டிய முகவரி :

கோகுலம்,
சாதனைத் தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.





மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளியில் பதினொராம் வகுப்பு படிப்பவர் பழனிக்குமார். மதுரை மாவட்டக் கலை இலக்கியக் கழகம் நடத்திய ஓவியப் போட்டியில் கலந்துகொண்டு மூன்றாம் பரிசை பெற்றுள்ளார். பழனி மேலும் பல பரிசுகளைப் பெற்று சிறப்புடன் உயர கைகுலுக்குவோம்!

அளவில் நடத்திய ஓவியத் திருவிழா போட்டியில் பங்கேற்று இரண்டாம் பரிசை பெற்றுள்ளார். நந்தினியின் ஓவியத் திறன் மேலும் வளர்ந்து புகழ்பெற வாழ்த்துவோம்!



வித்தியாசங்களைக் கண்டுபிடி!



இரண்டு படங்களுக்கிடையே உள்ள ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!

விடை 56-ம் பக்கம்

பூனை விரதம்!

"உங்க வீடு ரொம்ப அழகா
இருக்கு. எப்படி கட்டுனீங்க?"
"என் மூளையை பயன்
படுத்திதான்."
"களிமண்ணாலயா கட்டு
னீங்க? நம்பவே முடியலையே.!"
**- ஆர்.ஐஸ்வர்யா, முதல்
வகுப்பு, உ. எண் : 619,
ஈரோடு**





"இந்தக் கிழிசல் டிரஸ்
சோடாவா இவ்வளவு நேரம்
விளையாடினே?"
"இல்லைம்மா,
ஃபிரண்ட்ஸ்கோடதான் விளை
யாடினேன்...!"
**- பா.விக்னேசுவரன்,
குட்டம்**

"என்ன இன்றைக்கு எலி
யெல்லாம் துணிச்சலா ஓடுது.
நம்ம பூனை எங்கே!"
"இன்னிக்கு வெள்ளிக்கிழமை
யாச்சே... பூனை விரதமாம்."
**- வீ.பூவரசன், நான்காம்
வகுப்பு, ஞானாம்பிகா உதவி
தொடக்கப் பள்ளி,
வேதாரண்யம்**





"ஏண்டா, நீ எப்பவும் சட்டை
போடாமலே சாப்பிடுறே!"
"டாக்டர், என்னை வெறும்
வயித்துலதான் சாப்பிட
சொல்லியிருக்கார்!"
**- ஆர்.மோகன்,
கும்மிடிப்பூண்டி**

* தேக்கடி

* கொடைக்கானல் ஏரி



ஏலக்காய்



* சுருளி அருவி

தமிழ்நாட்டின் மேற்குக் கோடியில், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது எங்களது குளு குளு ஊரான போடிநாயக்கனூர் (தேனி மாவட்டம்). 400 ஆண்டுகளுக்கு முன்பு திருவிதாங்கூர் சமஸ்தானத்துக்கு உட்பட்டிருந்த பகுதி இது. அந்த சமஸ்தானத்து ராஜா அடிக்கடி இங்கு வேட்டையாட வருவார். அப்போது வேட்டையாடுவதில் அவருக்கு உதவியாக இருந்தவர் 'போடைய நாயக்கர்' என்பவர். இவரது திறமைக்குப் பரிசாக இவருக்கு இந்த ஊரை மலையாள மொழியில் பட்டயமாக எழுதிக் கொடுத்தார் ராஜா. பின்னாளில் இவர் நினைவாகத்தான் இந்த ஊர் போடையநாயக்கனூர் என்றழைக்கப்பட்டு, பின்னர் மருவி, போடிநாயக்கனூர் ஆனது.

நிலத்தடி நீரும் ஓசோன் படலமும் மாசுபடாத அளவுக்கு தொழிற்சாலைகள் எதுவுமே இல்லாத அருமையான விவசாய பூமி இது.

உலக ஏலக்காய் வர்த்தகச் சந்தையில், அதன் விலையை நிர்ணயிக்கும் ஒரே ஊர், உலகிலேயே இந்த ஊர்தான். அதனால்தான் இந்த ஊர் 'ஏலக்காய் நகரம்' (கார்டமம் சிட்டி) என அழைக்கப்படுகிறது. இங்கு தரம் பிரிக்கப்படும் ஏலக்காய்களை பிற மாநிலங்களுக்கும் பிற நாடுகளுக்கும் கொண்டு செல்வதற்காகவே, தென்னக ரயில்வே மதுரையிலிருந்து ஒரு ரயிலை இயக்கி வருகிறது.

இந்த ஊரைச் சுற்றி மூணார், டாப் ஸ்டேஷன், குரங்கணி, கொட்டகுடி, கொடைக்கானல், சுருளி அருவி, கும்பக்கரை அருவி, சோத்துப்பாறை அணை, வைகை அணை, பெரியார் அணை, மாட்டுப்பட்டி அணை, லோயர் கேம்ப், தேக்கடி, ஹைவேவிஸ் எஸ்டேட் ஆகிய இயற்கை எழில் கொஞ்சும் சுற்றுலாத் தலங்கள் உள்ளன.


இங்குள்ள கொழுக்குமலை என்ற



நகரம்!



✱ பெரியார் அணை



இடத்தில் விளையும் தேயிலை உலகப் புகழ்பெற்றது. இந்தத் தேயிலையை வரவழைத்துத்தான் அப்போதைய பிரிட்டிஷ் மகாராணி விக்டோரியா தேநீர் தயாரித்து அருந்தினார்.

இந்தியாவிலேயே மின்சாரம் மற்றும் பம்பிங் இல்லாமல், மலையிலிருந்து வரும் தண்ணீரை சுத்திகரிப்பு மட்டும் செய்து, அப்படியே ஊருக்கு விநியோகிக்கும் முறை மும்பைக்கு அடுத்து இந்த ஊர்தான். இங்கு தண்ணீர்ப் பஞ்சம் என்பது இதுவரை ஏற்பட்டதே இல்லை.

இந்த ஊரின் வடக்கே உள்ள மயானத்தையும் அதை ஒட்டி ஓடும் கொட்டகுடி ஆற்றையும் பார்த்த சமண முனிவர்கள், காசி நகரத்தைப் (வாரணாசி) போன்று இந்த ஊர் இருக்கிறது என்று சொல்லி, இந்த ஊருக்கு 'தென்காசியம்பதி' என்று பெயரிட்டதாகவும் சான்றுகள் நிரூபிக்கின்றன.

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் தமிழக முன்னாள் முதல்வருமான செல்வி ஜெயலலிதா 1989ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட முதல் தொகுதி இந்த ஊர்தான்!

- அ.அனீஸ் ஃபாத்திமா,
உ.எண் : 34, பதினோராம் வகுப்பு,
சிசம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
போடிநாயக்கனூர்


ஒரு வெள்ளிக் காசு!

படம் : ராம்கி

கதை : ர. பிரதீப்குமார்
பதினொராம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்.




மறுநாள் அரண்மனையில் -
இளவரசரை மணக்கும் அதிர்ஷ்டம் யாருக்கு கிடைக்கப் போகிறதோ?
அதிர்ஷ்டமில்லே, அறிவுன்னு சொல்லு!
விக்கிரமன் வந்தான்.
நான் ஒரேயொரு வெள்ளிக் காசு தருவேன். அதில் உண்பதற்கு உணவு, குடிப்பதற்கு நீர், விளையாட பொருள் வாங்க வேண்டும்.
எல்லோரும் திகைத்தனர்
ஒரு வெள்ளிக் காசில் எப்படி இவ்வளவும் வாங்க முடியும்?
வேண்டுமென்ற எல்லோரையும் வரச் செய்து விளையாடுகிறார்.
பலர் கோபத்துடன் வெளியேறினர். அப்போது ஒரு ஏழைப் பெண்...
இளவரசே என்னால் முடியும்! ஒரு வெள்ளிக் காசு கொடுங்கள்!
தருகிறேன். உன் பெயர் என்ன?



கனிமொழி, என் தந்தை ஒரு விவசாயி!
இந்தா ஒரு வெள்ளி காசு. என்ன செய்யப் போகிறாய்?
கனிமொழி அந்தக் காசில் ஒரு தர்பூசணியை வாங்கி வரச் செய்தாள்.
இதோ, தர்பூசணியின் சதையை உணவாக உண்ணலாம். அதில் வடியும் நீரை குடிக்கலாம்.
சரி, விளையாட்டுப் பொருள்...?
இதில் உள்ள கொட்டைகளைக் காய வைத்தால், பிறகு பல்லாங்குழி விளையாட பயன்படுத்தலாம்.
ஆகா அருமை! புத்திசாலிப் பெண்!
அத்துடன் தர்பூசணியின் தோலை மாட்டுக்குத் தீவனமாகவும் தரலாம்.
அப்பா, இவளே என் மனைவி! திருமணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்!
கனிமொழிக்கும் விக்கிர மனுக்கும் கோலாகலத்துடன் திருமணம் நடந்தது.



எந்த மொழி?





- குல்லா, பஜார் - **பார்சி**
- ரிக்ஷா - **ஜப்பானி**
- அலமாரி, பேனா, கடுதாசி, பாதிரி, சன்னல், சாவி - **போர்ச்சுகீசியம்**
- எக்கச்சக்கம், ஏடா கூடம், சந்தடி, தெம்பு, தொந்தரவு - **தெலுங்கு**
- அக்கறை, அக்கடா - **கன்னடம்**
- இனாம், ஜாஸ்தி - **உருது**
- ரூபாய், இஸ்திரி, கச்சேரி, கிச்சடி, சட்னி - **இந்துஸ்தானி**
- வக்கீல், அத்தர், அபின், அமல், கறார், பாக்கி, மகஜர், ஜாலி, தபால் - **அரபி**
- பீரோ - **ஃபிரெஞ்சு**
- துட்டு - **டச்சு**
- அவசியம், அநாதை, இராகம், இரத்தினம், இலக்கம், உற்சவம், கிராமம் - **வடமொழி**

- **ப.இனியன்,**
உறுப்பினர் எண் : 35, சென்னை





- எஸ்.ஸ்வேதா, உ. என் : 8, நான்காம் வகுப்பு, ஸ்ரீரேணுகா வித்யாலயா மெட்ரிக், தேனி



✱ நியூஸிலாந்தின் தேசியப் பறவை கிவி(kiwi). நியூஸிலாந்தைச் சேர்ந்த வில்லியம் ராம்சே தன் மனைவியின் மேல் கொண்ட அன்பினால் தன் பாலீஷ் கம்பெனிக்கு அந்தப் பெயரை வைத்தார்.

✱ 'போட்டோபிலிம்' கம்பெனி அதிபர் ஜார்ஜ் ஈஸ்ட்மென்னுக்குப் பிடித்த எழுத்து K என்பதால் Kவில் தொடங்கி Kவில் முடியுமாறு Kodak

இயங்குங்கள்!


ஆற்று வெள்ளம்போல ஓடிக்கொண்டேயிரு. எப்பொழுதும் ஞாபகம் வைத்துக்கொள். 'சாராவதி, சாராவதி' அதாவது சென்று கொண்டே இருங்கள் சென்று கொண்டேயிருங்கள் என்று சொல்வதை நிறுத்தாதீர்கள். இந்தப் பிரபஞ்ச இயக்கம் யாருக்காகவும் நிற்பதில்லை. அப்படியிருக்கும்போது நீங்களும் எதற்காகவும் நிற்காதீர்கள். மேலே, மேலே உங்கள் பயணத்தைத் தொடருங்கள்.

- கௌதம புத்தர்

வேத வாக்கு!

இறைவா! என் சிந்தனையில் எப்போதும் நல்லதையே சிந்தித்து, மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் மனிதனாக என்னை உயர்த்து! உடல் நலத்தை, செல்வ வளத்தை சீராக்கி உயர்த்து! ஒவ்வொரு நாளும் நல்ல செயல்களை மட்டுமே செய்யவும், மகிழ்ச்சியைத் தரக்கூடியதை மட்டுமே பேசவும் அருள் புரியுங்கள்!

- ரிக் வேதம்.



✱ மானரோவ்

✱ இந்தியாவிலேயே முழுவதும் தயாரிக்கப்பட்ட செயற்கைகோள்
- ஆப்பிள்

✱ நிலாவை முதலில் புகைப்படம் எடுத்த செயற்கைகோள்
- *லூனா 3, ரஷ்யா அக்டோபர் 1959.*

✱ அதிக நாட்கள் விண்ணில் தங்கியவர்கள்
- *டிட்டோவ், மானரோவ் (366 நாட்கள்)*

விண்வெளிச் செய்திகள்...



✱ லூனா 3

✱ இந்தியா முதன் முதலில் அணு வெடிப்பு சோதனை நிகழ்த்திய இடம் - போக்ரான் பாலைவனம் (இராஜஸ்தான்)

- மா.மோனிகா,
உறுப்பினர் என் : 199, பன்னிரெண்டாம் வகுப்பு,
மேரி இமெகுலைட் பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
திருப்பத்தூர்



என்று தன் கம்பெனிக்கு பெயர் வைத்தார்.



✱ எட்மண்ட் ரெனால்ட் தம் பால் பாயின்ட் கம்பெனிக்கு முதலில் வேறு பெயர்தான் வைத்திருந்தார். 'மில்டன்' என்ற வழக்கறிஞர் தம் பால்பாயின்ட் கம்பெனிக்கு வைத்திருந்த 'ரெனால்ட்' என்ற பெயர் தம் பெயருடன் ஒத்திருந்ததால் அதை

அப்படியா?



வாங்கித் தம் கம்பெனிக்கு வைத்துக்கொண்டார்.

✱ கம்ப்யூட்டர் பிரின்டர் Epson என்ற பெயர் Son of Electronic Printer என்பதன் சுருக்கம்.

✱ மரணம் என்ற பொருள் தரும் ஃப்ரெஞ்ச் சொல்லும், 'ஒன்று' என்ற பொருள் தரும் ஜெர்மானியச் சொல்லும் இணைந்ததுதான் கெஜிமேனின் 'மார்டின்' கொசுவர்த்திச் சுருளின் பெயர்.

- **அதிபன் அன்புமணி, உ. எண் : 120, ஈரோடு**

இசையின் ஸ்வரங்கள் ஏழு : சட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம்

உலோகங்கள் ஏழு : பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம், தரா, கஞ்சம்

மண்டலங்கள் ஏழு : வாயு, வருணன், சந்திரன், சூரியன், நட்சத்திரம், அக்கினி, மேகம்


மலைகள் ஏழு : இமயம், மந்தரம், விந்தியம், நிடதம், ஓமகூடம், நீலகிரி, கயிலை

உயிர்களின் பிறப்பு ஏழு : தேவர், மனிதர், விலங்கு, பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்

வள்ளல்கள் ஏழு : பாரி, ஓரி, காரி, ஆய், எழினி, நள்ளி, பேகன்

புண்ணிய நதிகள் ஏழு : கங்கை, சிந்து, யமுனை, நர்மதை, காவிரி, சரஸ்வதி, கோதாவரி

- **த.பிரகல்யா, ஒன்பதாம் வகுப்பு, உ. எண் : 318, பொன்னையா இராமஜெயம் பொதுப் பள்ளி, தஞ்சாவூர்**



ஏழு... ஏழு... ஏழு...



சரி பார்க்க...

I. 1) ÷, -, x, +

2) +, x, -, ÷

3) x, +, ÷

4) -, ÷, x, +


5) +, x, ÷, -

II. 1+2+3+4+5+6+7+(8 x 9) = 100

III.

15	29	28	18
26	20	21	23
22	24	25	19
27	17	16	30

IV.



V. 1.புலி, 2.நண்டு, 3.ஈசல், 4.மாடு, 5.பாம்பு, 6.எறும்பு, 7.கழுதை, 8.யானை, 9.பூனை, 10.நாய், 11.மீன் குஞ்சு, 12.நரி, 13.ஆடு, 14.எலி, 15.ஈ

ஐந்து வித்தியாசங்கள் :

1. ஏணிப்படி, 2. பந்தின் நிறம், 3.பையனின் ஷூ கலர், 4.வாளியின் கைப்பிடி, 5.இருக்கையின் கால்.

அன்பு நண்பர்களே...

'கோகுலம் எக்ஸ்பிரஸ்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்

(எக்ஸ்பிரஸ் பகுதி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

கோகுலம் சிறுவர் சங்கம்

பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!



651. எஸ்.காயத்ரி, ஆறாம் வகுப்பு, டேலியா ஆங்கில தொடக்கப் பள்ளி, ஹாங்காங்.

652. எம்.ராஜேஷ்குமார், ஏழாம் வகுப்பு, என்.எஸ்.கே.பி. மேல்நிலைப் பள்ளி, கூடலூர்

653. ஆர்.எஸ்தர் பிரியா, எல்.கே.ஜி., விஸ்வேஸ்வரா நர்சரி தொடக்கப் பள்ளி, விழுப்புரம்

654. ஆர்.ஆர்.பாரதி கிருஷ்ணன், ஐந்தாம் வகுப்பு, அரசினர் உயர்நிலைப் பள்ளி, சிட்லிங்.

655. ஜி.சினேகா, இரண்டாம் வகுப்பு, கலைமகள், தொடக்கப் பள்ளி, புதுக்கோட்டை

656. ஆ.ஆகாஷ், ப்ரீ.கே.ஜி., ஜவஹர் வித்யாலயா, சென்னை

657. கே.பாலாஜி, 4ஆம் வகுப்பு, ராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

658. க.தெரஸ் ரோஸ்லின், இரண்டாம் வகுப்பு, புனித பிலோமினாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மேலப்புதூர்

659. இர.சக்திவேல், 2ஆம் வகுப்பு, ஏ.ஆர்.ஆர். மெட்ரிக் பள்ளி, கும்பகோணம்

660. இராம.ஹரிணி, நான்காம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா நர்சரி பள்ளி, துறையூர்

661. உக.ஹரிபிரசாத், ஒன்பதாம் வகுப்பு, புனித சின்னப்பர் மே.நி. பள்ளி, நெய்வேலி

662. எஸ்.தேன்மொழி, ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மகளிர் உ.நி. பள்ளி, குத்தாலம்

663. சி.சத்தியமூர்த்தி, 2ஆம் வகுப்பு, ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளி, கருப்பம்புலம்

664. பி.பிரியசிமோனா, எட்டாம் வகுப்பு, ஸ்ரீ ரேணுகா வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, லட்சுமிபுரம்

665. ஜெ.சதீஷ்குமார், பத்தாம் வகுப்பு, அழகப்பா மாதிரி மே.நி. பள்ளி, காரைக்குடி

666. ஸ்ரீ. துர்காதேவி, ஆறாம் வகுப்பு, ஃபாரஸ்ட் ஹில் அகாடமி மேல்நிலைப் பள்ளி, வேட்டைக்காரன்புதூர்

667. நா.சௌபாக்யலக்ஷ்மி, ஏழாம் வகுப்பு, டதி மகளிர் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்

668. சா.பிரசன்ன வெங்கடேஷ், 2ஆம் வகுப்பு, மாண்ட் ஃபோர்டு பள்ளி, திருச்சி

669. கே.கிருஷ்ண நிவேதிதா, ஏழாம் வகுப்பு, மாண்ட் ஃபோர்டு மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திண்டிவனம்

670. மு.அருண்குமார், பதினொராம் வகுப்பு, ஆர்.வி.அரசு ஆண்கள் மே.நி. பள்ளி, ஒசூர்

671. மீ.பா.கிருஷ்ணமீனா, ஆறாம் வகுப்பு, அக்ஷயா அகாடமி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, ஒட்டன்சத்திரம்

672. எம்.குணசீலன், ஒன்பதாம் வகுப்பு, வையாபுரி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, சங்கரன் கோவில்

673. இரா.ஸ்ரீமதி, முதல் வகுப்பு, ஸ்ரீவாகீச வித்யாஷ்ரம், ஸ்ரீரங்கம்

674. பா.ராஜாபாண்டி, ஏழாம் வகுப்பு, இந்திரா காந்தி மேல்நிலைப் பள்ளி, திருப்பரங்குன்றம்



675. ஸ்ரீ. அக்க்ஷயா, ஆறாம் வகுப்பு, ஜெயகோபால் கரோடியா விவேகானந்தா வித்யாலயா, ஆவடி

676. வ.நிதின், மூன்றாம் வகுப்பு, புனித வளன் ஆரம்பப் பள்ளி, மணப்பாடு

677. ஆக்ருதி பாலாஜி, இரண்டாம் வகுப்பு, இகோல் ஸெயின்ட் ஜோஸ்ஃப் ஸ்கூல், எல்லோ நைஃப், கனடா.

678. எம்.எஸ். ஹரிசங்கர், இரண்டாம் வகுப்பு, எஸ்.ஈ.டி. உயர்நிலைப் பள்ளி, பூனாச்சி

679. ஏ.வி.சாருமதி, ஆறாம் வகுப்பு, ஈ.எஸ்.மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, விழுப்புரம்

680. மு.பிரவீன்குமார், ஒன்பதாம் வகுப்பு, ஹவர் ஓன் மாடர்ன் மெட்ரிகுலேஷன், சுத்தமல்லி

681. அர. குருதேவி, ஐந்தாம் வகுப்பு, ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளி, கருப்பம்புலம்

682. வே.சம்பத்குமார், எட்டாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய ந.நி. பள்ளி, காங்கேயம்

683. என்.சக்திஸ்ரீ, முதல் வகுப்பு, செயின்ட் லியோஸ் நர்சரி பிரைமரி ஸ்கூல், குமாரபாளையம்

684. எஸ்.செல்வேந்திரன், இரண்டாம் வகுப்பு, ஸ்ரீநிவாஸ் வித்யாலயா, அரியமங்கலம்

685. எம்.மதுரவாணி, மூன்றாம் வகுப்பு, பார்த்தாஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, பெருங்குடி

686. எம்.இசையமுது, ஆறாம் வகுப்பு, பார்த்தாஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, பெருங்குடி

687. அ.இல. பாவாணன், ஐந்தாம் வகுப்பு, மதர்லேண்ட் மெட்ரிக் பள்ளி, செல்வபுரம், கோவை

688. எஸ்.சத்தியம் சிவசங்கர், மூன்றாம் வகுப்பு, லட்சுமி ஸ்கூல், கருப்பாயூரணி

689. ஆர்.ஐஸ்வர்யா, ஐந்தாம் வகுப்பு, ஆல்ஃபா பள்ளி, புதுச்சேரி

690. ஜி.விக்ரம், 12ஆம் வகுப்பு, அரசு மே.நி. பள்ளி, சிறுமுகைப் புதூர்

691. எஸ்.மதுரா சங்கர், இரண்டாம் வகுப்பு, லட்சுமி ஸ்கூல், கருப்பாயூரணி

692. கே.பழனிவேல், ஒன்பதாம் வகுப்பு, குட்லெட் மேல்நிலைப்பள்ளி, சோளிங்கர்

693. லோ.ஷண்முகப்ரியா, ஏழாம் வகுப்பு, புஷ்பலதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

புகைப்படம்

: ....

வீட்டு முகவரி : ....

....

....

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

694. ப.சுபாஷ், ஒன்பதாம் வகுப்பு, மாண்ட் ஃபோர்ட் பள்ளி, காட்டூர்.

695. இர.யாமினி, மூன்றாம் வகுப்பு, சிறுமலர் மழலையர் மற்றும் துவக்கப் பள்ளி, அத்தியூர்

696. ஸ்ரீ பிரகதீஷ் பிரசாத், ஆறாம் வகுப்பு, நாலந்தா இன்டர்நேஷனல் பப்ளிக் ஸ்கூல், கிருஷ்ணகிரி

697. மீரா சிவராமகிருஷ்ணன், மூன்றாம் வகுப்பு, பக்தவத்சலம் வித்யாஸ்ரமம், வில்லிவாக்கம்

698. எஸ்.சந்திரசேகர், ஆறாம் வகுப்பு, மண்ணச்ச நல்லூர்

699. இர.கோபிகா, ஏழாம் வகுப்பு, ஏ.கே.டி.அகாடமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கள்ளக்குறிச்சி

700. எ.திவாகர், ஏழாம் வகுப்பு, ஷெப்பர்ட்ஸ் மெட்ரி குலேஷன் பள்ளி, மாடப்பள்ளி





ஆமை!

கன்னிக்கோயில் இராஜா

குட்டி குட்டி ஆமை
குனிந்து மெதுவாய் நடக்கும்
எட்டி நின்று பார்த்து
இயல்பாய் தலையை வளைக்கும்!

சின்னஞ் சிறிய புற்களை
விரும்பித் தானே உண்ணும்
சீக்கிரம் என்ற சொல்லை
சிந்தையிலே மறக்கும்!

அரிய வகை ஆமையினம்
அழிந்து கொண்டே வருகுது
அந்த இனத்தை நாமுமே
முயன்று காப்போம் நாளுமே!



கவிதைப் பூங்கா

சின்னச் சின்ன மழைத்துளி
சிந்தும் போது வானிலே
மின்னும் ஒளிக் கதிரினால்
மலரும் அழகு வானவில்!

கண்ணில் கண்டு மகிழ்ந்திடக்
காட்சி யாகும் வானவில்
விண்ணில் வரைந்த தாரடா
விவரம் கண்டு கூறடா!

நீலம், பச்சை, ஆரஞ்சு,
நிலவும் மஞ்சள் சிவப்பெனக்
கோலம் கொண்டு காட்டிடும்
குளிர்ந்த வானின் வானவில்!

- கவிமாமணி செ.சு. மலரடியான்

நீச்சலடி!

கடலின் பரப்பைக் கண்டே நீ
கரையில் நின்றே மலைக்காதே
உடலே பாயும் படகெனவே
உணர்ந்தே குதித்து நீச்சலடி!

கிணற்றின் ஆழம் பார்த்தே நீ
கிறக்கம் எதுவும் கொள்ளாதே
கணக்கம் உனக்கும் வேண்டாமே
சுகமாய் விழுந்து நீச்சலடி!


நீச்சல் நல்ல உடற்பயிற்சி
நிதமும் அதனைச் செய்தாலே
ஆற்றல் பெறுமே உடல் உள்ளம்
அதுவே உடலின் ஆரோக்கியம்!

தன்னைக் காக்கவும் தண்ணீரில்
தவறி விழுந்தோர் காத்திடவும்
சின்னத் தம்பி தங்கைகளே
சிறப்பாய் நீச்சல் கற்றிடுக!



- மா. கண்ணன்


நேகா எங்கே?
கதை, படம் : வீரமுடி
பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள் நேகா. அப்போது மரத்தின் மேலிருந்து...
ஆ.. கிளி
பொத்
கிளியை கையில் எடுத்தாள்.
காலில் அடி. பறவை டாக்டரிடம் காட்டுவோம்.
மருத்துவமனையில்...
கால் முறிந்துள்ளது. கட்டுபோட்டுள்ளேன். ஒரு மாதம் வரை பறக்க விடாதே!
ஓ.கே.!
வீட்டில்...
அப்பா! கிளி குணமாகும்வரை இங்கேயே இருக்கட்டும்.
சரி!
அ ஆ இ ஈ உ ஊ எ ஏ...
கிளியை அன்போடு கவனித்துக்கொண்டாள்.
கிளியின் கால் குணமானதும்...
இனி சுதந்திரமாக உன் இடத்துக்குப் போகலாம்!


அதன்பிறகு, கிளி தினமும் வந்து நேகாவை பார்க்கும்.
நேகா! நேகா!
ஆ... என் செல்லக்கிளியே வந்துட்டாயா!
ஒரு நாள் பள்ளிக்குப் போன நேகா வீடு திரும்பவில்லை.
நேகா இன்னும் வரலீங்க!
அப்போது செல்போன் ஒலித்தது.
உங்கள் பெண் எங்களிடம் தான் இருக்கிறாள். 10 லட்சம் தந்தால் உயிருடன் கிடைப்பாள்.
அந்த நேரம் கிளி தனது நண்பனுடன் வந்தது.
வா...! நாமும் நேகாவை தேடுவோம்.
நேகாவை பல இடங்களில் தேடின. அப்போது...
ஆ... ஐய்யோ.. என்னை அடிக்காதீங்க!
இது நேகாவின் குரல்தான்.


நேகாவை மரத்தில் கட்டி வைத்து இரண்டு முரடர்கள் அடித்துக் கொண்டிருந்தார்கள்.
உன் தந்தையிட மிருந்து பணம் வந்த பிறகுதான் விடுவோம்.
நேகாவை எப்படியும் காப்பாத்தணும்.. ஒரு ஐடியா வைத்திருக்கிறேன்.
கிளிகள் இரண்டும் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தன.
ஆபத்து! ஆபத்து! உதவி! உதவி!! வாங்க! வாங்க!
கிளியுடன் அந்த இடத்தை அடைந்த காவலர்கள், திருடர்களை கைது செய்தனர்.
கிளிகள் இரண்டுக்கும் குற்றவாளிகளை பிடித்துக் கொடுத்ததற்கு அரசாங்கத்திடமிருந்து தங்க மெடல் கிடைத்தது.
இனி நீங்களும் எங்க பிள்ளைகள்.
முற்றும்

3 நாயகர்கள்

முனைவர் ஆசுரா

பீஜிங் ஒலிம்பிக்கில் இந்தியா முதன் முறையாக மூன்று பதக்கங்களைப் பெற்றது உங்களுக்கு நன்றாகத் தெரியும். பதக்கங்களைப் பெற்ற மூவரைப் பற்றிய சுவாரஸ்யமான தகவல்கள் தெரியுமா? இதோ...



அபினவ் பிந்த்ரா

இந்தியாவின் தங்கமகன் அபினவ் பிந்த்ரா. தங்கப் பதக்கம் வென்றதால் மட்டுமல்ல; தங்கத்திலே புரளும் வசதி படைத்த செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்ததாலும் அவர் தங்க மகன்தான்.




இவருடைய பெற்றோர் டாக்டர் அபிஜித் பிந்த்ரா, பாபினி கவுர் பிந்த்ரா. அபினவ் தந்தை ஆண்டுக்கு ரூ.300 கோடி அளவுக்கு வியாபாரம் செய்கின்ற முன்னணி தொழிலதிபர். அபினவ் பள்ளிப் படிப்பை இந்தியாவில் முடித்தார். இளங்கலைப் படிப்பை அமெரிக்கா சென்று கற்றுத் தேர்ந்தார்.

அபினவ் பிந்த்ராவின் திறமையைக் கண்டறிந்தவர் 'லெப்டினன்ட் கர்னல் ஜெ.எஸ்.தில்லான்'. இந்தியாவில் மிகக் குறைந்த வயதிலேயே ஒலிம்பிக்ஸ் போட்டியில் கலந்துகொண்ட பெருமையை 2000ஆம் ஆண்டு பெற்றார்.

அப்பொழுது 590 புள்ளிகள் பெற்று தகுதிச் சுற்றில் பதினொராம் இடத்தைப் பிடித்தார். அபினவ் பிந்த்ராவின் தற்போதைய பயிற்சியாளர் சுவிட்சர்லாந்து நாட்டைச் சார்ந்த 'காப்ரியேலா புல்மான்'. 2001ஆம் ஆண்டு அபினவ் பிந்த்ராவுக்கு வெற்றிகரமான ஆண்டாக அமைந்தது. பல்வேறு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் மொத்தம் ஆறு பதக்கங்களை அள்ளினார். 2002ஆம் ஆண்டு காமன்

வெல்த் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றார். 2006ஆம் ஆண்டு நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இருவர் இணைந்து விளையாடும் பிரிவில் தங்கப் பதக்கமும், தனி நபர் போட்டியில் வெண்கலப் பதக்கமும் பெற்றார்.



அபினவ் பெற்ற விருதுகளும் பரிசுகளும்


இந்திய அரசாங்கத்தின் அர்ஜுனா விருது மற்றும் ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது ஆகியவற்றை முன்பே பெற்றுள்ள பிந்த்ராவுக்கு, தற்போது பரிசுமழை பொழிகிறது.

பீகார் அரசு பாட்னாவில் உள்ள விளையாட்டு மைதானத்துக்கு அபினவ் பிந்த்ராவின் பெயரைச் சூட்டியுள்ளது. கேரள அரசாங்கம் ஒரு தங்கப் பதக்கம் வழங்கியுள்ளது. இரயில்வே அமைச்சகம் 'அபினவ் பிந்த்ரா வாழ்நாள் முழுவதும் இரயிலில் இலவசப் பயணம் மேற்கொள்ளலாம்' என அறிவித்துள்ளது. இவரின் தந்தையார் இவருக்கு ஐந்து நட்சத்திர ஓட்டல் ஒன்றைக் கட்டிப் பரிசாக வழங்க இருக்கிறார்.

விஜேந்தர் குமார்

ஒலிம்பிக் குத்துச் சண்டைப் போட்டியில் முதன் முறையாகப் பதக்கம் வென்ற இந்திய வீரர் என்னும் பெருமையைப் பெற்றிருக்கிறார் விஜேந்தர் குமார். குத்துச் சண்டைப் போட்டியில் காலிறுதி வரை சென்ற அகில்குமார், ஜிதேந்தார் குமார் ஆகியோரின் முயற்சியும் பாராட்டிற்குரியது. வெண்கலப் பதக்கம் வென்ற விஜேந்தர் வெற்றிக்குப் பின் ''நான் இளைஞன், நான் பசியாய் இருக்கிறேன். இது என் தொடக்கம். இலண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதே என் இலட்சியம்'' என்றார்.

விஜேந்தரின் தந்தை 'மகிபால்சிங்' ஒரு சாதாரண பஸ் டிரைவர். அரியானாவிலிருந்து 80 கி.மீ. தொலைவில் இவரது கிராமமான 'பிவானி' உள்ளது. தன் மகனுக்கு சைக்கிள்கூட வாங்கித் தர முடியவில்லையே என நினைத்துப் பார்க்கும் தந்தையின் நினைவுகள் குடும்ப வறுமையைப் பிரதிபலிப்பதாக உள்ளது.



விஜேந்தர் சிறுவனாக இருக்கும்போது, பொழுதுபோக்குக்காக பிவானியிலுள்ள விளையாட்டு மைதானத்துக்குச் செல்வதுண்டு. அங்கே இருந்த பயிற்சியாளர் 'ஜெகதீஷ் சிங்' விஜேந்தரின் பாக்ஸிங் திறமையைக் கண்டறிந்து


* சுஷில்குமார்

ஊக்கப்படுத்தினார். 2006ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கமும், ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெண்கலப் பதக்கமும் பெற்றார்.

இந்தியாவின் ஒலிம்பிக் யுத்தம் :

இந்தியாவின் மல்யுத்த வீரர் சுஷில்குமார் 66 கிலோ எடைப் பிரிவில் 'ப்ரீ ரெஸ்லிங்' என்னும் பிரிவில் பங்கேற்று வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். இதற்கு முன்பு 1952ல் கே.டி.ஜாதவ் ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்றுள்ளார்.

விஜேந்தரின் தந்தையைப் போலவே இவரின் தந்தை 'திவான் சிங்' ஒரு பஸ் டிரைவர். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்த சுஷில்குமார் வாழ்க்கையோடு போராடித்தான் இந்த வெற்றியைப் பெற்றுள்ளார்.



* விஜேந்தர்குமார்

இவர், 2003, 2005, 2007ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற காமன்வெல்த் மல்யுத்தப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். 2003 மற்றும் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற 'ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப்' போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்றார்.



சுஷில்குமார் தம்முடைய 14ஆம் வயதில் பயிற்சியைத் தொடங்கினார். பயில்வான் யஷ்வீர், ராம்பால் ஆகியோரிடமும், பின்னர் சத்பால், ஜியான் சிங் போன்றோரிடமும் பயிற்சி பெற்றார். முதன் முறையாக 1998ஆம் ஆண்டு தங்கப் பதக்கம் பெற்றார். பின்னர் 2000 மற்றும் 2003ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் மல்யுத்தப் போட்டிகளில் தங்கம் மற்றும் வெண்கல பதக்கங்களை வென்றார்.

விஜேந்தர், சுஷிலின் தங்கக் கனவுகள்:

விஜேந்தர், சுஷில் இருவரும் வறுமையான வாழ்க்கையில் இருந்தாலும் தங்கள் திறமை மூலமாக உலகைத் திரும்பிப் பார்க்க வைத்தவர்கள். தற்போது சுஷில்குமாருக்கு இரயில்வே துறை பதவி உயர்வு வழங்கியுள்ளது.

அதைப்போன்றே விஜேந்தர் குமாருக்கும் அரியானா அரசு போலீசில் டி.எஸ்.பி.யாக பதவி உயர்வு வழங்கியுள்ளது. இந்த இருவருமே அடுத்த ஒலிம்பிக்கில் தங்கம் வெல்லும் துடிப்பில் இருக்கிறார்கள்.

இந்த இளைஞர்களைப்போல் இன்னும் பல இளைய நட்சத்திரங்கள் தோன்றி, விளையாட்டுத் துறையிலும் இந்தியாவைத் தலை நிமிர வைப்பார்கள் என்ற நம்பிக்கை வெளிச்சம் எழுகிறது.

வாண்டுதாசன்

வீரா 9

ஊஞ்சலில் இருந்து விழும் மாணிக்கத்தைக் கண்டு திடுக்கிட்ட பொன்முகிலன் ஒரு சில நொடிகள்தான் தயங்கினார். பிறகு அவரும் சட்டென மாணிக்கத்தை நோக்கி பாய்ந்தார். இருவரும் கீழ்நோக்கிச் சென்றனர். 'அவ்வளவுதான்; நம் கதை முடிந்தது' என நினைத்தான் மாணிக்கம்.

அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. இருவரும் அப்படியே அந்தரத்தில் மிதந்தனர். மாணிக்கம் மெல்லக் குனிந்து பார்த்தான். அங்கே வீரபத்ரன் நின்றிருந்தார். தப்பு... அவரும் அந்தரத்தில் மிதந்து கொண்டிருந்தார்.

''அரசே, மாணிக்கம் பயப்படாதீர்கள்'' என்றார். அவர் கையில் மந்திர வாள் இருந்தது. அதனை இருவரையும் நோக்கி நீட்டியபடி ஏதோ மந்திரத்தை உச்சரித்தார்.

அடுத்த நொடி, தட்டு வடிவில் இருந்த ஒன்று சுவரைத் துளைத்துக்கொண்டு சுழன்றபடி வந்தது. ''இருவரும் அதில் அமர்ந்துகொள்ளுங்கள்'' என்றார் வீரபத்ரன். பொன்முகிலனும் மாணிக்கமும் அதில் அமர்ந்தனர். அந்தத் தட்டு சுழன்றபடி துளை வழியே வெளியேறியது.



சூரா

இப்போது தலைக்கு மேலே வானமும் சுற்றிலும் வெட்டவெளியும் தெரிந்தது.

''பார்த்தாயா குருநாதர் வந்துவிட்டார்'' என்றார் பொன்முகிலன்.

''கீழே பாருங்கள் தங்கமுகிலனும் கேசவனும் இருக்கிறார்கள்'' என்று சுட்டிகாட்டினான் மாணிக்கம்.

அப்போது திடீரென அங்கே தோன்றினான் சூரபத்ரன். ஏற்கெனவே ஆறடிக்கும் மேலே இருந்த அவன் இப்போது பத்தடிக்கு மாறியிருந்தான். தனது பெரிய கையை நீட்டி தட்டைப் பிடித்தான்.

''சூரா, அவர்களை விட்டுவிடு. வீணாக அழிவைத் தேடிக்கொள்ளாதே'' என்றார் வீரபத்ரன்.

''எனக்கு அழிவே கிடையாது வீரா. உன்னிடமுள்ள மந்திர வாளை கொடுத்து விடு. இவர்களை விட்டுவிடுகிறேன்'' என்றான் சூரபத்ரன்.

''அது மட்டும் நடக்காது. இப்போதும் உன்னை மன்னிக்கத் தயாராய் இருக்கிறேன். அவர்களை விட்டுவிட்டு எங்காவது போய்விடு'' என்றார் வீரபத்ரன்.

''ம்கூம்... இனி பேசி பயனில்லை. நாம் பிரியும் முன்பு கடைசியாக மந்திர விளையாட்டு விளையாடினோமே நினைவிருக்கிறதா? அது பாதியிலேயே நின்று விட்டது. இப்போது மீண்டும் விளையாடுவோம். ஜெயிப்பவருக்கு மந்திர வாள். சரியா? சவாலை ஏற்கிறாயா?''

''நீ திருந்தவே மாட்டாய்'' என்று கோபத்துடனும் வெறுப்புடனும் சொன்னார் வீரபத்ரன்.

சூரபத்ரன் சிரித்தபடி ''விளையாட்டை ஆரம்பிக்கிறேன்'' என்று கூறி சொடுக்குப் போட்டான். அடுத்த நொடி அந்த இடம் கடுமையான பாலைவனமாக மாறியது. வெப்பம் தகித்தது. புயலும் வீசி மண் துகள்கள் பறந்தன.

தங்கமுகிலனும், கேசவனும், தளபதியும் தடுமாறினார்கள். ''கு.. குருவே... எங்கே இருக்கிறீர்கள்? கண்களே தெரியவில்லை'' என்றான் தங்கமுகிலன்.

''முகிலா, கேசவா... இப்போது உடல் வலிமையைவிட மன தைரியமும் புத்தி கூர்மையும்தான் முக்கியம். அப்படியே தரையில் படுங்கள்'' என்றார் வீரபத்ரன்.

''என்னது தரையில் படுப்பதா? நிற்கவே தகிக்கிறது. படுத்தால் கரிக்கட்டைதான் மிஞ்சும்'' என்றான் கேசவன்.



''கேசவா! குருநாதர் சொன்னால் அதில் ஏதோ ஓர் அர்த்தம் இருக்கும். படுங்கள் இருவரும்'' என்றார் தளபதி.

மூவரும் மணலில் படுத்தார்கள். என்ன ஆச்சர்யம்? ஈரமான ஆற்றுமணலில் படுத்திருப்பதைப் போலிருந்தது. சில நொடிகளில் அந்த இடம் பழையது போலானது. அங்கே சூரபத்ரனைக் காணவில்லை.

''தளபதியாரே உங்கள் உதவி தேவை. அந்த மரத்தின்மீது பாருங்கள்''

''அதென்ன கனிகள்? வித்தியாசமாக உள்ளதே''

''கனிகள் இல்லை, அவர்கள் அரசரும் மாணிக்கமும். ஒரே வாள் வீச்சில் கனிகள் இரண்டையும் வீழ்த்த வேண்டும்.''

''அவ்வளவுதானே! இதோ'' என்ற தளபதி தனது வாளை உருவினார். அடுத்த நொடி அந்த பிரதேசமே இருட்டாகி விட்டது.

''தளபதியாரே! இதுதான் சவால். கனிகள் இருக்கும் இடம் மனத்தில் பதிந்துள்ளது அல்லவா? குறி வைத்து வாளை வீசுங்கள்'' என்றார் வீரபத்ரன்.

தளபதி கண்களை மூடி மனதுக்குள் காட்சியைக் கொண்டு வந்தார். வாளை சுழற்றி வீசினார்.

''சபாஷ்! கனிகள் கீழே வருகிறது. இனி நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்ற வீரபத்ரன் மந்திரம் சொல்ல, தரையில் 'தொப்' 'தொப்' என சுய உருவத்துடன் விழுந்தார்கள் அரசனும் மாணிக்கமும்.

''விளையாட்டு இன்னும் முடியவில்லை'' என்று சூரபத்ரனின் குரல் கேட்டது. அந்த இடம் மீண்டும் பகலானது.

''மாணிக்கம்! இப்படி வந்துவிடு'' என்றான் முகிலன்.

மாணிக்கம் எழுந்து முகிலனையும் கேசவனையும் நெருங்கி அணைத்து கொண்டான். ''என்னை மன்னியுங்கள்'' சூரபத்ரனின் சூழ்ச்சியில் சிக்கிவிட்டேன்'' என்றான்.

''இது வருந்தும் நேரமில்லை. வெற்றி பெற வேண்டிய நேரம். நாம் மூவரும் சேர்ந்தால்தான் சூரபத்ரனை ஒழிக்க முடியும். தயாராய் இரு'' என்றான் முகிலன்.



அப்போது பூகம்பம் ஏற்பட்டதைப் போல் நிலம் குலுங்கியது. தரையைப் பிளந்து கொண்டு அந்த விநோத மிருகம் வெளியே வந்தது. அரசரை தூக்கி வந்த அதே மிருகம். சூரபத்ரன்தான் அது.

''முகிலா, கேசவா, மாணிக்கம் மூவரும் தயாராய் இருங்கள். பயப்படாதீர்கள்! உங்கள் மூவரின் சக்தியால்தான் சூரபத்ரனை அழிக்க முடியும். துணிச்சலுடன் சந்தியுங்கள். இதோ மந்திரவாள். இதை தவற விடாதீர்கள்!'' என்றார் வீரபத்ரன்.

மூவரும் சேர்ந்து அந்த மந்திரவாளின்

கைப்பிடியைத் தொட்டார்கள். அவர்களுக்குள் மின்னல் ஊடுருவியதைப் போலிருந்தது. அந்த மிருகத்தை நோக்கி பாய்ந்தார்கள்.

முகிலன் தாவி, அதன் கழுத்தைப் பிடித்தான். மந்திரவாள் அவனிடம்தான் இருந்தது. மாணிக்கம் அதன் இறக்கையைப் பிடித்து தொங்கினான். கேசவன் அதன் வால் பக்கமாக

"முகிலா, கேசவா, மாணிக்கம் மூவரும் தயாராய் இருங்கள். பயப்படாதீர்கள்! உங்கள் மூவரின் சக்தியால்தான் சூரபத்ரனை அழிக்க முடியும்"

ஏறினான். அது தலையை ஒரு குலுக்கு குலுக்கி, இறக்கையை விசிறி, வாலை உதறியது. மூவரும் திசைக்கு ஒருவராக சிதறி விழுந்தார்கள்.

''எழுந்திருங்கள்! மனம் தளராமல் மோதுங்கள். உங்களால் நிச்சயம் வெற்றி பெற முடியும். அந்த மிருகத்தின் நடு முதுகில் மந்திர வாளால் குத்த வேண்டும். அப்படி குத்தும்போது மூவரின் கையும் மந்திரவாளை பிடித்திருக்க வேண்டும்'' என்று முழக்கமிட்டார் வீரபத்ரன்.

வெவ்வேறு திசைகளிலிருந்த மூவரும் ஒரே சமயத்தில் பாய்ந்து வந்து மிருகத்தின் முதுகில் அமர்ந்தனர். அது விநோதமாக சத்தமிட்டவாறு வானில் பறந்தது. தலை கீழாகத் திரும்பியது.

''கேசவா! எச்சரிக்கையாக இரு'' என்றான் முகிலன்.

மூவரும் அதன் கரத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். அவர்களை தள்ளி விடுவதற்காக அது செய்த முயற்சிகள் பலிக்கவில்லை.

''மாணிக்கம் இன்னும் நெருக்கமாக வா. மந்திரவாளால் குத்தப் போகிறேன். தயாராய் இருங்கள்'' என்றான் முகிலன்.

ஒருவரை ஒருவர் பார்க்கும் விதமாக திரும்பி அமர்ந்தனர். மந்திரவாளை கெட்டியாகப் பிடித்து மிருகத்தின் நடு முதுகில் பாய்ச்சினார்கள். அது பயங்கரமாய்ச் சத்தமிட்டவாறு தரையில் விழுந்தது.

''இப்படி ஓடி வாருங்கள்'' என்று கத்தினார் வீரபத்ரன்.

மூவரும் மின்னல் வேகத்தில் அங்கிருந்து நகர, அந்த மிருகம் வெடித்து சிதறியது. அந்த துண்டுகள் மண்ணுக்குள் புதைந்து மறைந்தன.


''சபாஷ்! தைரியத்துடன் சாதித்தீர்கள்'' என்றார் வீரபத்ரன்.

பொன்முகிலன் தனது மகனை தழுவிக் கொண்டார்.

பிறகென்ன?

மாணிக்கமும் அவர்களின் நெருங்கிய நண்பனானான். தங்கமுகிலன் அரசனாய் முடி சூடியபோது மாணிக்கம்தான் படைத் தளபதி. கேசவன் மதியூக மந்திரி. அப்போதும் அவர்கள் நண்பர்களாய் ஒன்று கூடி பொழுதை கழித்தார்கள்.

(முற்றும்)



* பாட்னா ரயில் நிலையம்

இன்று இந்திய நாட்டின் மிகவும் பின் தங்கிய மாநிலங்களில் ஒன்று பீகார். இதன் நிலப்பரப்பு, மிகவும் தொன்மையானது. பழமையும் பாரம் பரியமும் கொண்டது. 2001 ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சுமார் எட்டு கோடியே முப்பது லட்சம் மக்களைக் கொண்ட பீகார் மாநிலம், ஆயிரம் ஆண்களுக்கு 921 பெண்கள் என்ற விகிதாசாரத்தைக் கொண்டிருக் கிறது. மாநிலத்தின் சராசரி எழுத்தறிவு 47 சதவிகிதம் மட்டுமே. அதிலும், எழுத் தறிவு பெற்ற பெண்கள் 33 சதவிகிதமே. நமது நாட்டின் சராசரி கல்வியறிவு 65% என்பது கவனிக்கத்தக்கது.

மாநிலத்தில் மேற்கிலிருந்து கிழக்காக ஓடும் கங்கை நதி மாநிலத்தை செழுமை யாக்குவதுடன், இரு கூறாகப் பிரிக்கிறது. மேலும், மாநிலத்தை வளப்படுத்துவதில் கங்கையின் துணை நதிகளுக்கும் பங்கு உண்டு. பௌத்த மதத்துடன் சம்மந்தப் பட்ட விஹாரங்களின் (கோவில் என்று பொருள் கொள்ளலாம்) பெயரிலிருந்து தான் இந்த நிலப் பகுதிக்கு பீகார் என்ற பெயர் வந்தது என்று சொல்கிறார்கள்.

பீகார் இந்திய கலாசாரத்தின் தொட்டில் என்றால் அது மிகை இல்லை. கௌதம புத்தர், மகாவீர், அரசியல் ஞானி சாணக்கியர் ஆகியோர் இந்த மண்ணைச் சேர்ந்தவர்கள். இங்கேதான், பண்டைக் காலத்திலேயே உலகப் புகழ்பெற்று விளங்கிய நாளந்தா மற்றும் விக்ரமசீலா பல்கலைக் கழகங்கள் செயல்பட்டன. அவை, உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்த யுவான் சுவாங் போன்ற அறிஞர்களை யும், யாத்திரிகர்களையும் ஈர்த்தன.



* போதி கயா

மாமன்னர் அசோகருடைய மகத நாட்டின் பகுதியாக விளங்கியது இன்றைய பீகார் மாநிலம். மகத நாட்டின் தலைநகரமாக விளங்கிய பாடலிபுத்திரம்தான் இன்று 'பாட்னா' என்ற பெயருடன், பீகார் மாநிலத் தின் தலைநகரமாக உள்ளது. மகத சாம்ராஜ்யத்தை கி.மு. 273 முதல் 232 வரை ஆண்ட அசோகர், உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க பேரரசர்களுள் ஒருவர். மகத நாட்டுக்கு வடக்கே, கங்கை

அசோகர் ஆண்ட பூமி!



கங்கை பாலம்



நதியின் மறுபக்கத்தில் இருந்தது வைசாலி நாடு. இங்கு, முதன் முதலில் மக்களாட்சி நடந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. வைசாலி நாட்டுக்கு வட கிழக்காக இருந்த நாடு 'மிதிலை'. அங்கே ஆண்ட மன்னர்களுள் முக்கியமானவர் ஜனகர் என்பதும், அங்குள்ள 'சிதாமாரி' என்ற ஊர்தான் சீதை பிறந்த ஊர் என்பதும் ராமாயண வரலாறு.



12ஆம் நூற்றாண்டில் முகமது கோரியின் படையெடுப்பு நடந்தது. முகலாயப் பேரரசர் அக்பர் 16ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் ஆட்சி செய்த சமயம் அவரது மொகலாய சாம்ராஜ்யத்தில் பீகாரும், வங்காளமும் அடக்கம். அக்பருக்கு முன் ஆட்சி செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் 'ஷெர் ஷா சூரி'. அவர் காலத்தில் கல்கத்தா முதல் பாகிஸ்தானில் உள்ள பெஷாவர் வரை பெருஞ்சாலை போடப்பட்டது. மொகலாயர்களை அடுத்து பீகார் வங்காள நவாபுகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. 1764ல் நடந்த பாக்சர் போரை அடுத்து கிழக்கிந்தியக் கம்பெனி பீகார், வங்காளம், ஒரிசா அடங்கிய வங்காள ராஜதானியில் வரி வசூல் மற்றும் நிர்வாக அதிகாரத்தைக் கைப்பற்றியது. 1912ல், வங்காளத்திலிருந்து பீகார் தனி ராஜதானியாகப் பிரிக்கப்பட்டது. 1935ல், பீகாரின் சில பகுதிகள் பிரிக்கப்பட்டு,

கௌதம்ராம்

ஒரிசா மாநிலம் உருவானது.



* பாட்னா மியூசியம்

தென் ஆப்பிரிக்காவிலிருந்து தாய் நாடு திரும்பிய மகாத்மா காந்திஜி, தனது சட்ட மறுப்புப் போராட்டத்தை பீகாரின் சம்பரன் மாவட்டத்தில் இருந்துதான் துவக்கினார். உடனடியாக காந்திஜி பீகார் எல்லையை விட்டு வெளியேற வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசு உத்தரவிட்டது. ஆனால், காந்திஜி "இந்தியனான நான் இந்தியாவின் ஒரு பகுதியான பீகாரிலிருந்து ஏன் வெளியேற வேண்டும்?" என்று வெளியேற மறுக்க, பிரிட்டிஷ் அரசு காந்திஜியைக் கைது செய்து சிறையில் அடைத்தது. நீதிபதி காந்திஜியை ஜாமீனில் விட அனுமதித்த போதிலும், அவர் ஜாமீனில் வெளியேற மறுத்து விட்டார். கடைசியில் வேறு வழியில்லாமல் அவரை அரசு விடுதலை செய்தது. சுதந்திரப் போராட்டத்தில் காந்திஜியின் பின்னால் பீகார் மாநிலத்தின் பல பிரமுகர்கள் அணி வகுத்து நின்றார்கள். அவர்களுள் சுதந்திர இந்தியாவின் முதல் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பாபு ராஜேந்திரப் பிரசாதும் ஒருவர். இன்னொரு முக்கிய தலைவரான ஸ்ரீகிருஷ்ண சின்ஹா பீகாரின் முதல் முதலமைச்சரானார். பீகாரின் தற்போதைய முதல்வர் நித்திஷ் குமார்.



* யுவான் சுவாங்

சுதந்திரத்துக்குப் பின் இந்திய அரசியலில் மிக முக்கிய பங்காற்றிய ஜே.பி. என்று அன்புடன் அழைக்கப்பட்ட ஜெயபிரகாஷ் நாராயணன் பீகாரைச் சேர்ந்தவர்.

சுமார் 94 ஆயிரம் ச.கி.மீ. பரப்பளவுள்ள பீகார் மாநிலத்தில் 37 மாவட்டங்கள் உள்ளன.

பீகார், கனிம வளம் மிகுந்த ஒரு மாநிலமாகும். அங்கு அதிகமான நிலக்கரி கிடைக்கிறது. தவிர, மைக்கா, சுண்ணாம்புக்கல், குவார்ட்ஸ், கிரானைட், இரும்புத்தாது, செம்பு உள்ளிட்ட பலவிதமான கனிமங்கள் கிடைக்கின்றன. அரசுத் துறையிலும், தனியார் துறையிலும் பல தொழிற்சாலைகள் பீகாரில் செயல்பட்டு வருகின்றன. பொகாரோ ஸ்டீல், சிந்த்ரி உரத் தொழிற்சாலை, டிஸ்கோ, டெல்கோ போன்றவை இங்குள்ள சில முக்கிய தொழிற்சாலைகளாகும். பீகாரின் முக்கிய மொழி இந்தி. ஒரு சில பகுதிகளில் வங்காள மொழி பேசும் மக்களும்

வசிக்கிறார்கள். தவிர, போஜ்பூரி, மகாதி, ஆங்கிகா, மைதிலி போன்ற மொழி களையும் பேசுகிறார்கள். இவற்றில் பழைமையான இலக்கியங்களைக் கொண்டது மைதிலி மொழி. வித்யாபதி, பிரபலமான மைதிலி மொழிக் கவிஞர். சூரியனை வழிபடுவது பாரத நாட்டு மரபு என்றாலும், பீகாரில் சூரியன் அஸ்தமனமாகும்போது வழிபடுவது வழக்கமாக உள்ளது. இது ஆண்டுக்கு இருமுறை சித்திரை மற்றும் கார்த்திகை மாதங்களில் கொண்டாடப்படுகிறது. அப்போது பெண்கள் விரதம் இருப் பார்கள். சகோதர-சகோதரி உறவைக் கொண்டாடும் பண்டிகை சாமா-சவேகா. பறவைகளின் உருவ பொம்மைகளைச் செய்து, வழிபடு வார்கள்.

சுற்றுலாத் தலங்கள் அதிகம் கொண்ட மாநிலங்களில் பீகாரும்



* நாளந்தா கட்டிடம்

ஒன்று. இங்கே ஏராளமான புத்த மத புனிதத் தலங்கள் உள்ளன. புத்தர் ஞானம் பெற்ற புத்த கயா பீகாரில்தான் இருக்கிறது. இந்துக்களின் புண்ணியத் தலம் கயா. 'மதுபானி' ஓவியக்கலை பீகாரின் பாரம்பரிய கலையாகும். 'செரிகல்லா' பீகாரின் நடனக் கலை.

இந்தியா சுதந்திர அடைந்து அறு பது ஆண்டுகளாகியும், இன்னமும் பீகார் முன்னேறாமல் இருக்கிறது. ஏன்? அதற்கு என்ன காரணம்? 1957ல் நடந்த சிப்பாய் கலகம் என்ற முதல் சுதந்திரப் போரில் பங்கேற்றவர்கள் பலரும் பீகாரைச் சேர்ந்தவர்கள். அதனால் பிரிட்டிஷாரது அடக்கு முறைகள் இங்கே கட்டவிழ்த்து



* வைசாலி ஸ்தூபி

விடப்பட்டன. இதனால், பிரிட்டிஷார் மீது மக்களுக்கு பெரும் வெறுப்பு ஏற்பட் டது. அதன் காரணமாக பிரிட்டிஷ் ஆட்சியின்போது, நாட்டின் மற்ற பகுதிகளில் ஏற்பட்ட நவீன தொழில் மய மாற்றங்கள் பீகாரில் நடக்காமல் போனது. பீகார் இதனால் பின் தங்கிய பகுதியாகவே விளங்கியது.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, பீகார் மாநிலத்தின் முன்னேற்றத்துக்காக சிறப்பு கவனம் செலுத்தி திட்டங்கள் தீட்டப்படாதது பெரும் குறைதான். ஆனாலும், முன்னேற்றப் பாதையில் மெள்ள நடைபோடுகிறது பீகார். ●

"டேய் மதி, கொஞ்சம் கடைக்குப் போய் கால் கிலோ வெள்ளை உளுந்தும், பச்சைப் பயிறும் வாங்கிட்டு வந்திடு. இந்தா பணம்" ஐம்பது ரூபாய்த் தாளையும் கைப் பையையும் மகனிடம் கொடுத்து விட்டு அவசரமாய் அடுப்படிக்குச் சென்றாள் சங்கரி.

படித்துக் கொண்டிருந்த மதி, புத்தகத்தை மூடி வைத்துவிட்டு அடுத்த தெரு முனையில் இருந்த மளிகைக் கடைக்குச் சென்றான். மாலை நேரம். கூட்டம் அதிகமாய் இருந்தது.

"தம்பி, என்னப்பா வேணும்?" கடைக்காரர் கேட்க, தனக்குத் தேவையானதைச் சொல்லி பணத்தையும் பையையுயம் கொடுத்தான்.

மடிக்கப்பட்ட இரண்டு பொட்டலங்களைக் கைப்பையில் போட்டு மீதிப் பணத்தையும் பையையும் கொடுத்தார் கடைக்காரர்.

சாலையில் நடந்துகொண்டே, கடைக்காரர் கொடுத்த சீட்டையும் மீதிப் பணத்தையும் சரிபார்த்த மதிக்கு ஆச்சரியம். காரணம், பொருட்களுக்கான தொகை ரூபாய் நாற்பது போக, பத்து ரூபாய் தரவேண்டிய கடைக்காரர் அறுபது ரூபாய் கொடுத்திருந்தார்.

மதியின் மனமும் அறிவும் எதிர் எதிராய் பேச ஆரம்பித்தன.

"இப்போது என்ன செய்யப் போகிறாய்?"

"பாவம் கடைக்காரர். ஒரு நாள் முழுக்க வியாபாரம் செய்தால் வருமானமாக நூறோ, இருநூறோதான் கிடைக்கும். இந்த ஐம்பது ரூபாயை அவரிடம் திருப்பிக் கொடுக்கப் போகிறேன்"

"நீ ஏமாற்றவில்லையே. அவராகத் தானே கொடுத்தார். பின் ஏன் திருப்பித் தரப் போகிறாய்?"

"இது அவருடைய பணம்தானே?"

"இருக்கட்டும். சூழ்ச்சி செய்து, அவருக்குத் தெரியாமலா எடுத்து வந்தாய்?"

"இல்லை, இருந்தாலும்..." மதியின் எண்ணம் அதற்குமேல் செல்லவில்லை.



அந்த ஐம்பது ரூபாய்த் தாளை நான்காக மடித்து தனது கால் சட்டைப் பையில் வைத்துக்கொண்டான்.

"அம்மா, இந்தாம்மா" பத்து ரூபாயை

மு. நடராசன்

சிறுகதை

நேர்மை

யும் பொருட்களையும் தாயிடம் கொடுத்து விட்டு அமர்ந்து புத்தகத்தைத் திறந்தான் மதி.

கண்கள் புத்தக வரிகளில் இருக்க, மனம் யோசனைகளை அடுக்கிக் கொண்டிருந்தது. 'நண்பன் கார்த்திக்கை அழைத்துக் கொண்டு, புதிய திரைப்படத்துக்குச் சென்றுவிட வேண்டியதுதான், நினைத்த



போதே உடல் முழுக்க பரவசம்.

மறுநாள் காலை... பள்ளியில் இடைவேளை முடிந்து தொடங்கிய பாடவேளைக்கு, கணக்கு ஆசிரியர் வந்திருந்தார். அதே வகுப்பில் படிக்கும் வசந்த் கண்களில் நீர் சொட்ட எழுந்து நின்றான்.

''என்னடா, ஏன் அழற?'' கணக்கு ஆசிரியர் கேட்டார்.

''நான் வைத்திருந்த ஐம்பது ரூபாயைக் காணவில்லை. தமிழ் வழிகாட்டி நூல் வாங்குவதற்காக எனது தந்தை கொடுத்தார். கணக்குப் புத்தகத்தில்தான் வைத்தேன். இப்போது பார்த்தால் காணவில்லை.'' கண்களைக் கசக்கிக் கொண்டே ஆசிரியரிடம் கூறினான்.

''டேய், இடைவேளையின் போதுதான் யாராவது எடுத்திருக்கணும். ஒருவேளை அறியாமையில் எடுத்திருந்தா இப்போ திருப்பிக் கொடுத்திடுங்க. மன்னிச்சிடறேன்'' எச்சரிக்கை விடுத்தார் ஆசிரியர்.

எவரும் முன்வரவில்லை. வகுப்புத் தலைவனை அழைத்து அனைவரின் பையையும் சோதனை செய்யச் சொன்னார்.

முதல் வரிசையில்தான் மதி அமர்ந்திருந்தான். அவனது கால் சட்டைப் பையில் கைவிட்ட வகுப்புத் தலைவனிடம் நான்காக மடிக்கப்பட்ட ஐம்பது ரூபாய்த் தாள் கிடைத்தது.

''சார், இவன்கிட்ட இருக்கு சார்'' எனக் கூறியபடி பணத்தை ஆசிரியரிடம் கொடுத்தான் வகுப்புத் தலைவன்.

நெஞ்சு 'திக்'கென்றது மதிக்கு.

''சார்... நான் எடுக்கலை சார். இது என்னோட பணம். என்னை நம்புங்க சார்''

படபடப்போடு கூறினான் மதி.

''தோலை உரிச்சுப்புடுவேன் படவா! நீ எடுக்கலைன்னா இவ்ளோ பணம் உனக்கேது? யார் கொடுத்தாங்க?'' கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனார் ஆசிரியர்.

பதில் சொல்ல முடியாமல் 'திரு



..என்ன சொல்லி தான் நிரபராதி என நிரூபிப்பது? மதியம் அம்மாவை அழைத்து வராவிட்டால் நிச்சயம் பள்ளியில் சேர்க்கமாட்டார்கள்..

திரு'வென விழித்தான் மதி.

''மதியம் பள்ளிக்கு வரும்போது உனது பெற்றோரை அழைத்து வா'' எனக் கட்டளையிட்டார் ஆசிரியர்.

இப்படி ஒரு சோதனை வரும் என சற்றும் எதிர்பார்க்கவில்லை மதி. 'என்ன சொல்லி தான் நிரபராதி என நிரூபிப்பது? மதியம் அம்மாவை அழைத்து வராவிட்டால் நிச்சயம் பள்ளியில் சேர்க்கமாட்டார்கள். மனம் கனக்க கண்கள் நீரை உகுத்துக் கொண்டிருந்தன.

மதியவேளை. ஆசிரியர் அறையில் கணக்கு ஆசிரியர் முன் தனது தாயுடன் நின்றுகொண்டிருந்தான் மதி.

ஆசிரியர் தாயிடம் நடந்ததை சொன்னார்.

''நீ எடுக்கலைன்னா இந்தப் பணம் ஏது?''

அழுதுகொண்டே அந்தப் பணம் கிடைத்த விதத்தை, விவரித்தான் மதி.

அப்போது கேட்டது, வகுப்புத் தலைவனின் குரல்!

''சார் இந்தக் கதிரேசன்தான் வசந்த் புத்தகத்திலிருந்து பணத்தை எடுத்தானாம்.''

''என்னடா இது?'' கதிரேசனைப் பார்த்துக் கேட்டார் ஆசிரியர்.

''ஆமாம் சார். காலையில் நீங்க சோதனை போடச் சொன்னதுமே, நான் பயந்துட்டேன். உண்மையைச் சொல்லி விடலாம்னு நினைச்சு எழுந்தப்ப மதி மாட்டிக்கிட்டான்.

இருந்தாலும் மனசாட்சி என்னை உறுத்திச்சு. அதான் வசந்திடம் உண்மையைச் சொன்னேன். தயவுசெய்து என்னை மன்னிச்சிடுங்க சார்.'' கெஞ்சினான் கதிரேசன்.

''கடைக்காரர் கவனக்குறைவாய் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுத்திருந்தால், இந்தச் சிக்கலே உனக்கு வந்திருக்காதே. மனதறிந்து நீ செய்த தவறு உனக்கே ஆபத்தைத் தேடித் தந்திருக்கிறது. ஒருவேளை கதிரேசன் உண்மையை ஒப்புக்கொள்ளாமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? உன்னைப் பள்ளியை விட்டே நீக்கியிருப்பார்கள்'' தாய் சொல்ல தலை குனிந்தான் மதி.

''நேர்மையைக் கைவிட்டால் அதற்குரிய விளைவை நிச்சயம் அனுபவித்தே தீரவேண்டும்'' என்ற ஆசிரியரின் வார்த்தைகள் மனத்தில் ஆழமாய்ப் பதிய, இனி அடுத்தவர் பணத்துக்கு ஆசைப்படுவதில்லை என்றும் நேர்மையை ஒரு போதும் கைவிடுவதில்லை என்றும் உறுதி எடுத்துக் கொண்டான் மதி.

கோகுலம் இதழின் புதிய வாசகி நான். இதழின் ஒவ்வொரு பக்கமும் மிகவும் அருமை. பொது அறிவுக் களஞ்சியமாய் இனிக்கிறது. இத்தனை நாளாக மிஸ் செய்துவிட்டோமே என்ற வருத்தம் ஏற்பட்டது.

- எல்.மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி

முதல் பரிசு பெற்ற 'மயிலிறகு' சிறுகதை மனதை வருடியது. பரிசு பெற்ற அஜிதா பாரதி அக்காவுக்கு என் வாழ்த்துகள்!

- உ.மதன்ராஜ்,
நான்காம் வகுப்பு,
ஊ.ஒ.தொ.பள்ளி,
வீரன்வயல்

ஸ்பெஷல் உங்கள் கைவண்ணம் கோகுலத்தின் முதல் திருப்பத்திலேயே வைத்தது!

- ர.ஸ்ரீதேவி, ஐந்தாம் வகுப்பு,
சக்தி மெட்ரிக் மேனிலைப் பள்ளி,
சின்னசேலம்

'**இ**ரண்டாயிரம் பொற்காசுகள்' என்ற படக்கதை சிந்திக்கவும் சிரிக்கவும் வைத்தது. படங்களும் பளிச்! பீர்பால் யுக்தி அதைவிட பளிச்!

- த.சந்தனக்குமார், வி.எம்.சத்திரம்

கவிதைப் பூங்காவில் இடம்பெற்ற மூன்று கவிதைகளுமே முத்தான கருத்து களை தித்திக்க தித்திக்கக் கொடுத்தன.

- எம்.ஜி. பரத், திண்டுக்கல்

கோகுலத்தில் வரும் கதைகள், கட்டுரைகள், படக்கதைகள், ஓவியங்கள் மிகவும் சிறப்பாக உள்ளன. நான் கோகுலத்தை மாதந்தோறும் படித்து நல்ல செய்திகளை அறிகிறேன்.

- ந.கார்த்திக், திருநெல்வேலி

தித்திக்க... தித்திக்க...



விருந்தளித்த விதம் வெகு ஜோர்!

- ஆர்.ஜி.காயத்ரி,
திசையன்விளை

இனி சென்னை முகப்பேர் வேலம்மாள் பள்ளியை 'செஸ் வீரர்கள் பள்ளி' என அழைக்கலாம். மாணவர்களின் சாதனை வியக்க

விடையைச் சொல்; பரிசை வெல் - 16

1. எட்வர்ட் ஜென்னர் தமது ஆய்வுக் கட்டுரையை வெளியிட்ட ஆண்டு ....

2. குத்துச் சண்டை வீரர் விஜேந்தர் வசிக்கும் மாநிலம் ....

3. 'பாரா' என்கிற கிரேக்க சொல்லுக்கு அர்த்தம் ....

4. டெடி பியர் பொம்மையைத் தயாரித்தவர் ....

5. டோபட்டோவுக்கு புத்தி புகட்டியவர் ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....

போட்டி

பரிசு ரூபாய் 1000/-

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்திசெய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.



முடிவு தேதி : 15.10.2008

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


676


677


678


679


680


681


682


683


684


685


686


687


688



689



690


691


692


693


694


695


696


697


698


699


700

பெயர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 • Registered as a Newspaper in Srilanka

